

வருடாந்த அறிக்கை 2013




NIBM
BUILDING COMPETENCIES

தேசிய வியாபார முகாமை நிறுவனம்

வருடாந்த அறிக்கை – 2013

உள்ளடக்கம் **பக்க இல.**

தே.வி.மு.நிறுவனத்தை உங்களுக்கு தெரியுமா? 02

எமது உறுதிமொழி 03

நோக்குஇ செயற்பண 05

தே.வி.மு.நி.இன் பிரயாணம் 07

ஆளுனர் சபை 09

அறிமுகம் 10

மனித வளங்கள் முகாமைத்துவம 11

தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை (தே.வி.மு.பா.) 21

விசேட நிகழ்ச்சிகள் - 2013 24

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு 25

சாதனைகள் - 2013 26

எதிர்காலத் திசைகள 27

பிரிவுசார் கட்டமைப்பு

உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு 29

முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு 32

பிராந்திய நிலையங்கள் 35

நூலகம், ஆவண நிலையம 41

NIBM
BUILDING COMPETENCIES



தே.வி.மு.நிறுவனத்தை உங்களுக்கு தெரியுமா?

- இது ஓர் அரசாங்கத்திற்குச் சொந்தமான, சுய நிதிப்படுத்தல் நிறுவனமாகும்.
- இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது.
- 2013ஆம் ஆண்டில் அண்ணளவாக 11,000 மாணவர்களுக்கு ஈடுகொடுத்தது.
- 45 வருடங்களைக் கொண்ட மரபுரிமைப்பேற்றைக் கொண்டுள்ளது (1968-2013)
- ஒரு புதிய பட்டப் பாடசாலைக்கு அதன் தொடுவானங்களை நீடித்துள்ளது. தே.வி.மு.பா. - இலங்கையில் முதலாவது பசுமை வளாகம்
- நன்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கூட்டுமுயற்சியில் ஈடுபடுகின்றது.
- இலங்கையில் முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வியில் ஈடுயிணையற்ற வாய்ப்புக்களை வழங்குகின்றது.
- தொழிலாற்றக்கூடிய 100% பட்டதாரிகளை உற்பத்தி செய்கின்றது.
- இலங்கை தேசிய வர்த்தகச் சபையினால் தொடர்ச்சியாக 2012இலும், 2013இலும் சிறந்த அரசாங்கச் சேவைத் துறைத் தாபனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எமது உறுதிமொழி

பொருட்களுக்கும் அத்துடன் சேவைகளுக்கும் தரத்தின் அம்சம் அதிகளவு உறுதிமொழியை சேர்க்கின்றது. சமூகத்தினுள், வாடிக்கையாளர் எதிர்பார்ப்பின் பூரணமான திருப்தியை உறுதிப்படுத்துவதற்காக தரத்திற்கான அவசியம் படிப்படியாக அதிகரிக்கின்றது. இக் கருத்துருவை கரிசனைக்கு எடுப்பதன் மூலம், ISO 9001: 2008 என்ற மிகவும் கிட்டிய சர்வதேச தர நியமத்தை தே.வி.மு.நி. பெற்றுள்ளது. இது நிறுவனத்தினால் வழங்கப்படும் கல்வியின் நியமங்களை உறுதிப்படுத்துகின்றது. 2007ஆம் ஆண்டில், முகாமைத்துவத் தகவல் முறைமைப் பிரிவினால் வழங்கப்பட்ட கல்வியினதும், சேவைகளினதும் மட்டத்தை நிரூபிப்பதற்காக ISO 9001:2000 சான்றளிப்பினை இப்பிரிவு பெற்றது. 2009ஆம் ஆண்டில், அதிசிறந்த சேவையை உறுதிப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் முழுமையான செயற்பாட்டிலான நடைமுறைக்காக தேசிய தர விருதின் சிறப்பு விருதினை வெற்றியீட்டியதுடன், ISO 9001: 2008 சான்றுப் பத்திரத்தையும் பெற்றுக்கொண்டது.

- தே.வி.மு.நி.இல் உள்ள நாம் தேசிய மற்றும் சர்வதேச பட்ட நூற்கல்வி மற்றும் கூட்டாண்மைத் துறை சேவைகளுக்கு பொருந்துவதற்காக பட்ட, உயர் டிப்ளோமா மற்றும் மட்ட செயற்றிட்டங்கள் ஆகியவற்றை தே.வி.மு.நி. வழங்கும்.

- இந் நோக்கத்திற்காக, அவர்களது முழுமையான திருப்தியைப் பெறுவதற்காக எமது வாடிக்கையாளரினதும், வேறு பங்குடமையாளரினதும் தேவைப்பாடுகள் மீது ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கு நாம் அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளோம்.

- மேற்படி குறிக்கோளைச் சாதிப்பதற்காக, ISO 9001: 2008 சர்வதேச நியமத்துடன் ஒரு தரத்திலான முகாமைத்துவ முறைமையை விருத்திசெய்வதற்கும், பராமரிப்பதற்கும் அத்துடன் தாபிப்பதற்கும் நாம் அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளோம். கிரமமான இடைவேளைகளில் எமது தர முகாமைத்துவ முறைமைகளின் விளைதிறனை நாம் மதிப்பிடுவதுடன்,

எமது தாபனரீதியிலான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எமது நடைமுறையைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவோம்.

- தொழில் முறையிலானதும், தகுதியானதுமான உள்ளக மற்றும் வெளிவாரி விரிவுரைக் குழாமொன்றை விருத்திசெய்வதன் ஊடாக எமது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களை எமது செயற்றிட்டங்கள் மீறுவதையும் நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

"உறுதிமொழியுடனான இடம்"



SGS

Certificate SG09/02538

The management system of

National Institute of Business Management

No:120/5,Wijerama Mawatha,
Colombo 07,
Sri Lanka.

has been assessed and certified as meeting the requirements of

ISO 9001:2008

For the following activities

Offering short term and long term Professional certification courses including Diploma and Higher Diploma

Further clarifications regarding the scope of this certificate and the applicability of ISO 9001:2008 requirements may be obtained by consulting the organisation

This certificate is valid from 1 September 2012 until 31 August 2015 and remains valid subject to satisfactory surveillance audits.
Re certification audit due before 31 July 2015
Issue 2. Certified since 1 September 2009

Authorised by

SYSTEM CERTIFICATION ISO 9001 SGS

UKAS MANAGEMENT SYSTEMS 005

SGS United Kingdom Ltd Systems & Services Certification
Rossmore Business Park Ellesmere Port Cheshire CH65 3EN UK
t +44 (0)151 350-6666 f +44 (0)151 350-6600 www.sgs.com

SGS 9001-8 01.0311

Page 1 of 1

This document is issued by the Company subject to its General Conditions of Certification Services accessible at www.sgs.com/terms_and_conditions.htm. Attention is drawn to the limitations of liability, indemnification and jurisdictional issues established therein. The authenticity of this document may be verified at http://www.sgs.com/ch/en/certified_clients.htm. Any unauthorized alteration, forgery or falsification of the content or appearance of this document is unlawful and offenders may be prosecuted to the fullest extent of the law.

நோக்கு

"இலங்கையில் சிறந்த வியாபாரக் கல்வித் தாபனமாக விளங்குதல்"

செயற்பணி

"பயிற்சி, கல்வி மற்றும் உசாவுகை ஆகியன ஊடாக மக்களிலும், தாபனங்களிலும் தகுதிகளை முன்னேற்றும் பணயில் நாம் இருக்கின்றோம்."

நிறுவனத்தின் நோக்கங்கள்

பின்வரும் நியதியாக்க நோக்கங்களை நிறுவனம் வலியுறுத்தியுள்ளது:

- அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பொறுப்பு முயற்சிகளின் முகாமையாளர்களையும், மேற்பார்வைப் பணியாளர்களையும் முன்னேற்றுதல்.
- முகாமைத்துவத்தில் ஆக்கத்திறனான பங்கெடுப்புக்கு ஊழியர்களைப் பயிற்றுவித்தலும், அறிவூட்டுதலும்.
- முகாமைத்துவத்தில் நிபுணத்துவச் சேவைகளை ஏற்பாடு செய்தல், செயற்றிறன் நியமங்களைத் தாபித்தல், மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.
- மனிதப் பங்களிப்பை உச்சப்படுத்துவதற்கும், செயற்றிறனை விருத்தி செய்வதற்கும் ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.
- சூழலின் சிறந்த பாராட்டுக்கு சம்பந்தப்பட்ட சமூக-பொருளாதார அம்சங்களினதும், முகாமைத்துவ அம்சங்களினதும் மீது ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றலும், தரவுகளைத் திரட்டுதலும்.
- வெளியார் தாபனங்களுக்கு முகாமைத்துவ தகவல் சேவைகளை வழங்குதலும், தகவல் தொழில்நுட்பத் துறையில் ஆளணியினரைப் பயிற்றுவித்தலும்.
- அவர்களது முறைமைகளையும், நடைமுறைகளையும் மற்றும் செய்முறைகளையும் மேம்படுத்துவதற்காக கூட்டுத் துறைக்கு உசாவுகைச் சேவைகளை வழங்குதலும், அவர்களது திட்டமிடல் நடைமுறையில் உதவியளித்தலும், அத்துடன் பொதுவாக மாற்றமடையும் சூழல் காரணிகளினால் முன்வைக்கப்படும் சவால்களை நிறைவேற்றவதற்கு அவர்களது முயற்சிகளில் உதவியளித்தலும்.
- கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களின் ஊடாக தாபனங்களில் உற்பத்தித்திறனிலான மேம்படுத்தலுக்கு வசதியளித்தல்.

எமது குறிக்கோள்கள்

- வாழக்கைத்தொழில் அறிவையும், தகைமைகளையும் நாடி நிற்பவர்களுக்கு இணைந்த ஒழுக்காறுகளில் தரமான வியாபார முகாமைத்துவக் கல்வியையும், பணிப்புரைகளையும் வழங்குதல்.

- நன்கு-கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் ஊடாக அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் முகாமையாளர்களினதும், மேற்பார்வைப் பணியாளர்களினதும் தகுதிகளை விருத்தி செய்தல்.
- முகாமைத்துவத்தில் ஆக்கத்திறனானதும், பயனுறுதிவாய்ந்ததுமான பங்கெடுப்புக்கு தாபனங்களில் உள்ள ஊழியர்களைப் பயிற்றுவித்தலும், அறிவூட்டுதலும்.
- கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஊடாக தாபனங்களில் உற்பத்தித்திறனின் மேம்படுத்தலை வசதிப்படுத்தல்.
- செயற்றிறன் நியமங்களைத் தாபிப்பதில் அரசாங்க, பொது மற்றும் தனியார் துறை தாபனங்களுக்கு முகாமைத்துவ உசாவுகையினதும், ஆலோசனைச் சேவைகளினதும் ஏற்பாடும், தாபனரீதியான வளர்ச்சியை நோக்கி மனித வள பங்களிப்பினை உச்சமாக்குதலும்.

நாம் வழங்குகின்றோம்:

- **எமது வாடிக்கையாளர்களுக்கு,**

  தனிப்பட்டவர்கள் : அவர்களது தகுதிகளைக் கட்டியெழுப்புவதற்காக தொழில் முனைப்பிலான நன்கு அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் மற்றும் ஆதரவு

  தாபனங்கள் : தாபனரீதியான செயற்றிறனைக் குறிக்கோளாகக் கொண்டு ஆற்றலளவைப் பலப்படுத்துதல்

- **எமது பணியாளர்களுக்கு,**

  வாழக்கைத்தொழில் சுதந்திரம், செயற்றிறன் அடிப்படையிலான வெகுமதிகள், அன்பான வேலை செய்யும் சூழல், மற்றும் நிறுவனத்துடன் கற்பதற்கும், வளர்வதற்குமான வாய்ப்பு

- **எமது வருகை தரும் பீடத்திற்கு,**

  அங்கீகாரம், மேற்படி சராசரி வெகுமதிகள் மற்றும் வலைப்பின்னலுக்கான வாய்ப்பு

- **எமது பங்காளிகளுக்கு,**

  உலக தரத்திலான விநியோக வசதி மற்றும் நிபுணத்துவம்

- **எமது சமூகத்திற்கு,**

  அறிவை பரப்புதலும், உற்பத்தித்திறனை மேம்படுத்துதலும்

தே.வி.மு.நி.இன் பிரயாணம்

1968

முகாமைத்துவ அபிவிருத்தி, உற்பத்தித்திறன் நிலையம் (மு.அ.உ.நி.) தாபிக்கப்பட்டது.

1968 - 1976

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் கீழ் சுதந்திரமான தாபனமொன்றாக மு.அ.உ.நி. உருவாக்கப்பட்டது. தேசிய முகாமை நிறுவனம் (தே.மு.நி.) என்ற பெயரின் கீழ் முகாமைத்துவ அபிவிருத்தி, உற்பத்தித்திறன் நிலையம் தொழிற்பட ஆரம்பித்தது. அத்துடன் தேசிய வியாபார முகாமை நிறுவனமாக நிறுவனம் ஒன்றிணைக்கப்பட்டது.

1980 - 1986

கணனி முறைமை வடிவமைப்பில் முதலாவது டிப்ளோமா அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன், குருநாகலில் முதலாவது பிராந்திய நிலையம் அமைக்கப்பட்டது.

1991 - 1996

சுய நிதிப்படுத்தல், அரசாங்கத் துறைத் தாபனமொன்றாக நிறுவனத்தை முன்னேற்றுவதற்காக தே.வி.மு.நி. பாராளுமன்ற அதிகாரச் சட்டம் திருத்தப்பட்டது. "மாற்றமடையும் சூழலொன்றில் உற்பத்தித்திறனை அதிகரித்தல்" என்ற கருப்பொருளின் கீழ் அதன் வருடாந்த சமவாயத்தை நடத்துவதன் மூலம் அதன் 25ஆவது வருடாந்த விழாவை தே.வி.மு.நி. குறித்துக்கொண்டது. அயர்லாந்து, டப்ளின் பல்கலைக்கழகக் கல்லூரியுடனான கூட்டொப்பந்தத்தில் முகாமைத்துவத் தகவல் முறைமைப் பட்டத் திட்டத்தில் பி.எஸ்சி. ஆரம்பமாகியது. மத்திய மாகாணத்தில் உள்ளவர்களின் வளர்ச்சியுறும் கிராக்கியை நிறைவேற்றுவதற்காக கண்டியில் பிராந்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

1999 - 2004

அயர்லாந்து தேசியப் பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவத் தகவல் முறைமையின் பீ.எஸ்சி பட்டத்தைச் சூட்டுவதற்காக தே.வி.மு.நிறுவனத்தின் முதலாவது பட்டமளிப்பு வைபவம் நடைபெற்றது. வியாபார முகாமைத்துவக் கல்வி தொடர்பான சகல விடயங்கள் மீது சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காக 1991இன் இல.28 தே.வி.மு.நி. அதிகாரச் சட்டத்தின் கீழ் வியாபார முகாமைத்துவ கல்விச் சபை நிறுவப்பட்டது. நிறுவனத்தின் தரத்தையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதில் பங்களித்த ஜப்பானிய 5S முறையை தே.வி.மு.நி. அமுல்படுத்தியது.

2007 - 2013



வியாபார நிருவாகம், நிதி, மனித வளங்கள், முகாமைத்துவத் தகவல் முறைமைகள், ஏற்பாட்டியல் மற்றும் கைத்தொழில் முகாமைத்துவம் ஆகிய வற்றில் பீ.எஸ்சி முகாமைத்துவப் பட்டமொன்றை மேற்கொள்வதற்காக தே.வி.மு.நிறுவனத்தின் மாணவர்கள் தகுதியடைந்தார்கள். பிரிவினால் வழங்கப்பட்ட உயர் தரத்திலான கல்வியை அங்கீகரித்து ISO 9001: 2000 சான்றளிப்பை முகாமைத்துவத் தகவல் முறைமைப் பிரிவு பெற்றது. 40ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களுடன் ஒத்திருப்பதற் காக இடவசதியிலான கற்கைப் பகுதிகளை வழங்குவதற்காக தே.வி.மு. நிறுவனத்தின் உட்கட்டமைப்பின் மேலதிக முன்னேற்றத்தில் அதிகளவை ஆளுனர் சபை மூலதனமிட்டது. தே.வி.மு. நிறுவனத்தின் பட்டம் அளிக்கும் பாடசாலையான தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை நுகேகொடையில் வெற்றிகரமாக செயற்படுகின்றது.



ஆளுனர் சபை

பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க
தலைவர்
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
120/5, விஜேராம மாவத்தை
கொழும்பு 07

கலாநிதி இ.எ.வீரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
120/5, விஜேராம மாவத்தை
கொழும்பு 07

பேராசிரியர் மங்கள பொன்சேகா
பணிப்பாளர்
பட்டத்திற்குப் பிந்திய
முகாமைத்துவ நிறுவனம்
28, லெஸ்லி ரணகல மாவத்தை கொழும்பு 08

திரு. ரியாஸ் மிஹ்லர்
தலைவர்
பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம்
இல.356, எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 05

திரு.சுஜீவா ராஜபக்ஷ
தலைவர்
இலங்கை பட்டயக்
கணக்காளர் நிறுவனம்
இல.30/A, மலலசேகர மாவத்தை
கொழும்பு 07

திரு.அர்ஜ'ன் பெர்னாண்டோ
பிரதம நிறைவேற்று அலுவலர்
இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
இல.73/5, காலி வீதி, கொழும்பு 03

திரு.ரம்யசந்திரா குணசேகர
சட்டத்தரணி
இல. 33, ஸ்ரீ தர்மராம வீதி
கோட்டை
மாத்தறை

அறிமுகம்

தேசிய வியாபார முகாமை நிறுவனம் (தே.வி.மு.நி.) இலங்கையில் முதன்மையான வியாபாரப் பாடசாலையாகும். நாம் உலகளாவிய போக்குகளுக்கு அமைவாக விளங்குவதுடன், இன்றைய தேவைகளுக்குப் பொருந்துகின்றவாறு எமது உற்பத்திகளைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துகின்றோம். கடந்து போன ஆண்டுகளில் எமது சாதனையை நாம் விருத்தி செய்துள்ள அதேவேளை, முகாமைத்துவப் பயிற்சியிலும், கல்வியிலும் முதன்மை நிலையிலிருப்பதை நிரூபிக்கின்றோம். நாம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு சிறந்த எதிர்காலங்களைச் செதுக்குவதற்கு உதவியுள்ளோம்.

சர்வதேச தொழில் தாபனத்தின் திட்டங்களின் அமுலாக்கத்திற்கான ஒரு முகவராண்மையான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கூட்டுமுயற்சியில் கைத்தொழில்கள், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் 1968இல் தாபிக்கப்பட்ட தே.வி.மு.நி. 45 வருடங்களாகப் பணியாற்றுகின்றது. இது பின்னர் பாராளுமன்றச் சட்டம் ஒன்றினால் (1976இன் 23ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைச் சட்டம்) தேசிய வியாபார முகாமை நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டது. 1991இன் 28ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இந்த அதிகாரச்சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ், நியதியாக்கச் சபையொன்றாக தொழிற்படுகின்ற தே.வி.மு.நி. அரசாங்கத் துறையில் உள்ள ஒரு கல்வி நிறுவனமாகும். நாம் சுய-நிலைத்திருத்தலிலான, சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தை வழங்கும் நிறுவனமாவோம். 2009ஆம் ஆண்டிலிருந்து தேசிய தர விருதுகளின் பரிசளிப்பில் சிறப்பு விருதும், மேலதிகமாக தே.வி.மு.நிறுவனத்திற்கு ISO-9001-2008 கட்டளைகள் சான்றுப்பத்திரமும் பரிசளிக்கப்பட்டுள்ளன.

2007இன் இல.7 கம்பெனிகள் சட்டத்தின் கீழ் வர்த்தக வியாபார முயற்சியொன்றாக வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை (தே.வி.மு.பா.) என்ற பெயரில் வியாபாரப் பாடசாலையொன்றைப் பதிவுசெய்வதென தே.வி.மு.நி.இன் ஏற்பாடுகள் மீதான அடிப்படையில் தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் ஆளுனர் சபை தீர்மானித்தது. இது நிதி, திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட "ஒரு வழிகாட்டி - அரசாங்க வியாபார முயற்சியின் தலைவரும், பணிப்பாளர் சபையும்" மீதான அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் முழுவதும் உரித்தினைக் கொண்ட துணை நிறுவனமொன்றாக தே.வி.மு.பா. தொழிற்படும்.

மனித வளங்கள் முகாமைத்துவம்

அதன் அமைப்புரீதியிலான நோக்கங்களை அடைவதற்கும், மாணவருக்கும், மற்றும் வேறு பங்குடமையாளர்களுக்கும் பெறுமதியை வழங்குவதற்கும் வேலைப்படையின் முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது என்பதை தே.வி.மு.நி. அடையாளம் கண்டுள்ளது. இப்பணியில் எமது ஊழியர்கள் முழுமையாகச் சம்பந்தப்பட்டு, ஈடுபட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துமுகமாக, பின்வரும் மூலக்கூறுகளை ஒன்றிணைக்கின்ற மாதிரியொன்றை நாம் விருத்தி செய்துள்ளோம்.

- ஆட்சேர்ப்பு, தெரிவு மற்றும் நியமனம்
- மூலோபாயத்திலான திசை (நீண்ட கால)
- செயற்றிறன் இலக்குகள் (குறுகிய கால)
- செயற்றிறன் மதிப்பாய்வு
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- வெகுமதிகள் முகாமைத்துவம்
- தொழில் முன்னேற்றம்

அவர்கள் நிறைவேற்றுகின்ற வேலையை நோக்கியும், தாபனத்தை நோக்கியும் உயர்வான ஊழியர் அர்ப்பணிப்பினை முன்வைப்பதற்கு ஒன்றுடன் ஒன்று எவ்வாறு இந்த ஆக்கக்கூறுகள் ஒருங்கிணைந்துள்ளன என்பது பின்வரும் தே.வி.மு.நி. மனித வள முகாமைத்துவ மாதிரியில் சித்தரிக்கப்பட்டுள்ளது.





மாதிரி: மனித வள முகாமைத்துவ மாதிரி

நாம் இரு ஊழியர் வகுதிகளைக் கொண்டுள்ளோம் அதாவது, அறிவைக் கைமாற்றுதல், தகுதியை முன்னேற்றுதல், மற்றும் உசாவுகை ஆகிய பெறுமதியை உருவாக்குகின்ற நடைமுறையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள நூற்கல்விப் பணியாளர் மற்றும் நிறுவனத்தை நிருவகிப்பதற்கு ஆதரவு அவசியமான நூற்கல்வி-சாராப் பணியாளர். இவ்வகுதிகளின் செயற்றிறன் மதிப்பாய்வும், வெகுமதியளித்தல் திட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசப்படுகின்றன. எனினும், தே.வி.மு.நி. குறிக்கோள்களினதும், நோக்கங்களினதும் சாதனையிலிருந்தும், அவற்றுக்கான இணைப்பிலிருந்தும் இரு வகுதிகளுக்கான செயற்றிறன் மதிப்பாய்வும், வெகுமதியளித்தலும் தோன்றுகின்றன.

மாதிரியில் காட்டப்பட்டுள்ளவாறு, ஒழுங்கமைப்புத் தேவைகள் மீதான அடிப்படையில் தொழில் பகுப்பாய்விலிருந்து தோன்றுகின்ற தொழில் விவரணத்தை எமது ஊழியர்கள் கொண்டுள்ளார்கள். தே.வி.மு.நி.இன் நீண்ட கால மற்றும் நடுத்தர காலத் திட்டம் வரையிலான அங்கமாகவுள்ள நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் ஊடாக ஊழியர்களுக்கு மூலோபாய வழிகாட்டல் வழங்கப்படுகின்றது.

நோக்கங்களிலிருந்து பெறப்பட்டுள்ள திட்டத்தைச் சாதிப்பதும், வருடாந்த வரவு- செலவுத் திட்டத்தில் குறித்து வைக்கப்பட்டுள்ள இலக்குகளைச் சாதிப்பதும் தனிப்பட்ட ஊழியர்களுக்கான பொறுப்புக்களாகும்.

செயற்றிறன் மதிப்பாய்வுத் தாள்களின் ஊடாக வருடாந்தம் தனிப்பட்ட அடிப்படையில் ஊழியர் பொறுப்புக்கள் தொடர்பான செயற்றிறன் அளவீடு செய்யப்படுகின்றது. உசாவலர்களினதும், பணிப்பாளர்களினதும் செயற்றிறன் மதிப்பாய்வுத் தாள்களில் பகுப்பாய்வின் உள்ளடக்கமும், ஆழமும் அதிகளவு தகவலையும், ஊடுருவலையும் கைப்பற்றுவதற்காக எஞ்சியுள்ள பணியாளரிடமிருந்து சிறிதளவு வித்தியாசப்படுகின்றது. தொழில் விவரணத்திலும், வருடாந்த வரவு-செலவுத் திட்டத்திலும் குறித்துரைக்கப்பட்டுள்ள எதிர்பார்ப்பினை ஊழியர் ஒருவரின் செயற்றிறன் நிறைவேற்றினால், சம்பள ஏற்றம் மற்றும் தொழிலை விரிவுபடுத்தல் ஆகியன ஊடாக வெகுமதியளிக்கப்படுகின்றது.

எதிர்பார்க்கப்பட்டதை விட செயற்றிறன் குறைவானதென்றால், தனது தொழிலை நிறைவேற்றுவதற்கு அவசியப்படுகின்ற திறன்களையும், தகுதிகளையும் அடைவதற்கு அவருக்கு ஆதரவளிக்கின்ற பயிற்சி மற்றும் முன்னேற்ற நடைமுறையொன்றின் ஊடாக ஊழியர் அனுப்பப்படுகின்றார். சரியான ஊழியர் மனோநிலைக்கும், நடத்தைக்கும் பயிற்சியும், முன்னேற்றமும் வழங்கப்படுகின்றன.

அதிகளவு தகைமைகளையும், தகுதிகளையும் கொண்டிருப்பதற்காக தே.வி.மு.நி.இல் நடத்தப்படும் திட்டங்களிலும், வெளிவாரித் திட்டங்களிலும் பங்கெடுப்பதற்கு எமது ஊழியர்களுக்கு நாம் ஊக்கமளிக்கின்றோம். உயர்வான தகைமையை ஊழியர் ஒருவர் அடையும் போது, அவர் உயர் பதவிநிலைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கீழே அடையாளம் காட்டப்பட்டுள்ளவாறு பொருள் நன்மைகளையும், உரிமை உணர்வுபூர்வமான ஆதரவையும் ஊழியர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களது திருப்தியை உயர்த்துவதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

- நிதிசார் நன்மைகள்: ஊக்குவிப்புகள், சம்பள ஏற்றங்கள், மருத்துவச் செலவினங்களின் மீள்நிரப்பல்
- நிதிசாராத நன்மைகள்: பதவியேற்றங்கள், கடல்கடந்த பயிற்சி
- வேலை செய்யும் சூழல்/வசதிகள்
- தொழில் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்
- தொழிலை விஸ்தரித்தல் மற்றும் வளப்படுத்தல்
- மேற்பார்வையாளர்கள், சகபாடிகள், மற்றும் கீழ் பணிவோர் ஆகியோரின் ஆதரவு.

இத் துறைகளில் அவர்களின் வீதப்பாட்டினை எமது ஊழியர் திருப்தி அளவீடு கைப்பற்றியுள்ளதுடன், குறைந்த வீதப்பாட்டுடனான துறைகள் முன்னேற்றத்திற்கான வாய்ப்பாகத் தெரிகின்றது.

நீண்ட கால அடிப்படையில் மாணவர்/வாடிக்கையாளர் தாபன திருப்தியை மேம்படுத்துகின்றதும், குறுகிய காலத்தில் வரவு-செலவுத்திட்டமிடப்பட்ட வருமானத்தைச் சாதிக்கின்றதுமான பொதுவான குறிக்கோளை நோக்கி தே.வி.மு.நி.இல் உள்ள முழு வேலைப்படையும் பணியாற்றுகின்றது. உயர்வான நிதிசார் சாதனைகள் சிறந்த வெகுமதிகளை அவர்களுக்கு வழங்குகின்றன. இது உசாவலரிலிருந்து தே.வி.மு.நி. வேலைப்படையின் சகல அடுக்குகளினதும் கூட்டுமுயற்சியினதும், ஒத்துழைப்பினதும் ஊடாக சாத்தியமானதாகும். எமது வேலை முறைமையின் பிரகாரம், புதுமையானதும்,

இறுதியில் தே.வி.மு.நி. பயனுறுதிவாய்ந்ததன்மையை நோக்கி ஆதரவளிப்பதுமான வகிபங்கொன்றை ஒவ்வொரு ஊழியரும் ஆற்ற வேண்டியுள்ளது. குறிப்பிதழ்கள், சுற்றறிக்கைகள், அறிவித்தல்கள், கூட்டங்கள், வாய்மொழியிலான அறிவித்தல் மற்றும் பின்னூட்டல்கள், தொலைபேசி அழைப்புக்கள், மற்றும் ஈமெயில்கள் ஆகியவற்றின் ஊடாக வேறுபட்ட அடுக்குகளுக்கு இடையிலான தொடர்பாடல் இடம்பெறுகின்றது. சூழ்நிலைக்குப் பொருத்தமானவாறு இதே முறைகளின் ஊடாகவே கண்டியிலும், குருநாகலிலும் மற்றும் காலியிலும் அமைந்துள்ள மூன்று நிலையங்களுடன் தொடர்பாடல் கொள்ளப்படுகின்றது.

மனித வளங்களின் முன்னேற்றம்

இயக்கமானது முன்னோக்கிச் செல்வதற்கும் மற்றும் கற்பதற்கும், முன்னேற்றத்திற்குமான வாய்ப்புக்களின் ஏற்பாட்டினையும் இயலச்செய்வதற்குமான பங்கிடப்பட்ட பொறுப்பினைப் பிரித்துக்கொடுப்பதே அபிவிருத்தியாகும். தமது குறிப்பிட்ட தொழிலின் வகிபங்குகளினதும், அவர்கள் பணியாற்றுவதற்கான நடைமுறைகளினதும் சம்பந்தத்திலும் மற்றும் புதிய பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை அவர்கள் திசைதிருப்பப்பட்டுள்ள இந்நோக்கத்திற்காகவும் தமது பங்களிப்பினை முன்னேற்றுவதற்கு ஊழியர்கள் ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். அது ஊழியரின் தகுதியின் பகுப்பாய்வையும் மற்றும் ஊழியர்களின் நம்பகத்தன்மை மட்டங்களின் முன்னேற்றத்தையும் பின்வரும் தொழில்நுட்பங்கள் மூலம் மேற்கொண்டுள்ளது.

- தொழில் சுழற்சி
- ஊழியர்களை மீளமர்த்துதல்
- தொழிலை விரிவுபடுத்தல்
- தொழிலை வளமூட்டுதல்

இரு பிரதான ஊழியர் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் பிரதான பணிகளைப் பராமரிப்பதற்காகவும், ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவதன் மூலம் நிறுவனத்தின் பிரதான பணிகளையும், நோக்கத்தின் ஒத்துழைப்பினதும், பொதுத்தன்மையினதும் ஆர்வத்தினை ஒன்றுடன் ஒன்று செயற்படுத்துவதன் மூலமும், கட்டியெழுப்புதல் மூலமும் நிறுவனத்தின் உயிர்ப்புள்ள ஆர்வத்தினையும் பராமரிக்கும் காரணத்திற்காக அவை உருவாக்கப்பட்டள்ளன.

- விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கம்
- மரண நன்கொடைச் சங்கம்

மனித வளங்களின் பயிற்சி

தே.வி.மு.நி.இன் பயிற்சிக்கும் மற்றும் வெளிவாரிப் பயிற்சித் திட்டங்களுக்கும் தே.வி.மு.நி.இன் நூற்கல்வி உறுப்பினர்களும் மற்றும் நூற்கல்வி சாராத பணியாளர்களும் அனுப்பப்பட்டுள்ளார்கள். இத்தகைய பயிற்சிநெறிகளின் விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன

உள்ளகப் பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு

	பெயர்	பயிற்சிநெறியின் தலைப்பு
01	திரு.எச்.நிஷான் இந்திக	வியாபார முகாமைத்துவத்தில் உயர்தர சான்றுப்பத்திர பயிற்சிநெறி
02	திரு.சுனில் ஹேரத்	கருத்திட்ட முகாமைத்துவத்தில் உயர்தர டிப்ளோமா
03	திரு.எச்.கே.சி.திலங்க	வியாபார முகாமைத்துவத்தில் உயர்தர டிப்ளோமா
04	செல்வி ஷனிகா சமனி	தொழில்முறையாளர்களுக்கான ஆங்கில உரையாடல்
05	செல்வி வை.டி.சி.டீ சில்வா	நிதிசார் முகாமைத்துவத்தில் உயர்தர டிப்ளோமா
06	செல்வி ஜி.டி.ரி.பெரேரா	மனித வள முகாமைத்துவத்திலர் உயர்தர தேசிய டிப்ளோமா
07	செல்வி எச்.எ.ஜி.ஐ.உதேனி	வியாபார முகாமைத்துவத்தில் உயர்தர டிப்ளோமா
08	திருமதி சி.எம்.ககுலவல	நிதிசார் கூற்றை வாசிப்பது, புரிந்துகொள்வது மீதான செயலமர்வு
09	திருமதி என்.ரி.ஜி. எல்விட்டிகல	நிதிசார் கூற்றை வாசிப்பது, புரிந்துகொள்வது மீதான செயலமர்வு
10	செல்வி எஸ்.சுகந்தி	நிதிசார் கூற்றை வாசிப்பது, புரிந்துகொள்வது மீதான செயலமர்வு
11	செயற்றிட்ட அலுவலகப் பணியாளர்	சந்தைப்படுத்தல் மீதான செயலமர்வு
12	திருமதி என்.ரி.ஜி. எல்விட்டிகல	வாழ்க்கைத்தொழில்புரிபவர்களுக்கான உயர்தரமான வெளிவாரி மீதான செயலமர்வு
13	திரு.என்.ஆர்.டயஸ்	வாழ்க்கைத்தொழில்புரிபவர்களுக்கான ஆங்கிலத்தில் டிப்ளோமா
14	செல்வி எஸ். சுகந்தி	தொழில்முறையாளர்களுக்கான உயர்தர excel
15	திருமதி ஜி.சி.சுபாஷினி	தொழில்முறையாளர்களுக்கான உயர்தர excel
16	திரு.எச்.கே.சி.திலங்க	தொழில்முறையாளர்களுக்கான ஆங்கில உரையாடல்

உள்நாட்டு பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு

	பெயர்	பயிற்சிநெறியின் தலைப்பு
01	திரு.ஆர்.ஜி.மஞ்சநாயக்க	'சைபர்' குற்ற செயலமர்வு
02	திரு.எம்.பி.ரி.சமரசேகர	டீசல் மின்பிறப்பாக்கிகளின் பராமரிப்பு மீதான பயிற்சிச் செயல்திட்டம்
03	திரு.சமன் ரொட்றிகோ	'ஓன்லைன்' ஊழியர்கோப்பு தகவல் முறைமைகள் மீதான பயிற்சிச் செயல்திட்டம்
04	திரு.எ.என்.பி.என்.ரஞ்ஜித்	'ஓன்லைன்' ஊழியர்கோப்பு தகவல் முறைமைகள் மீதான பயிற்சிச் செயல்திட்டம்
05	திரு.ஆர்.ஜி.மஞ்சநாயக்க	SEARCC சர்வதேச மகாநாடு
06	திரு.ஆர்.ஜி.மஞ்சநாயக்க	Security Your Big Data மீதான மகாநாடு
07	திரு.ஜி.எ.லக்ஸ்மன்	கருத்திட்ட முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா
08	திருமதி எஸ்.யோகராஜா	வியாபார முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா
09	திரு.சமன் ரொட்றிகோ	மனித வள முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா
10	திரு.சுனில் ஹேரத்	கருத்திட்ட முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா
11	திரு.எ.என்.பி.என்.ரஞ்ஜித்	மனித வள முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா
12	திரு.எச்.எ.ஜே.ஒ.பத்மசிறி	கணனி வலைப்பின்னல்களில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா
13	திருமதி கே.நில்மினி தர்மவர்தன	இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் தேசிய மகாநாடு - 2013
14	சகல தே.வி.மு.நி. பணியாட் உறுப்பினர்கள்	வெளி-வரம்பு பணியாளர் பயிற்சி செயல்திட்டம்
15	கலாநிதி இ.எ.வீரசிங்க	"சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்கு மக்களுக்கு உதவுதல்" மீதான கருத்தரங்கு
16	திரு.டி.எம்.எ.குலசூரிய	சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்கு மக்களுக்கு உதவுதல்" மீதான கருத்தரங்கு

திட்டங்களில் பங்கெடுத்த ஊழியர்களின் எண்.

	2012	2013
உள்ளகப் பயிற்சித் திட்டம்	10	16
உள்நாட்டுப் பயிற்சித் திட்டம்	18	16
வெளிநாட்டுப் பயிற்சித் திட்டம்	0	0
மொத்தம்	**28**	**32**

அட்டவணை 01 - திட்டங்களில் பங்கெடுத்த ஊழியர்களின் எண்.



உருபு 01 - பயிற்சித் திட்டங்களில் பங்கெடுத்த பயிற்சியாளர்களின் எண்.

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் மனித வளங்கள்

	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 2013.12.31	2009	2010	2011	2012	2013
நூற்கல்விப் பணியாளர்	50	29	31	48	36	43
நிறைவேற்றுத் தரத்திலான பணியாளர்	53	25	20	19	18	19
ஆதரவு தரத்திலான பணியாளர்	119	84	100	93	97	92
மொத்தம்	**222**	**138**	**151**	**153**	**151**	**154**

அட்டவணை 02 - நிறுவனத்தின் மனித வளங்களின் உள்ளடக்கம்



உருபு 02 - நிறுவனத்தின் மனித வளங்களின் உள்ளடக்கம்

2013 இன் போது நிறுவனத்தின் ஆட்சேர்ப்புகள்

	பெயர்	பதவி	ஆட்சேர்ப்புத் திகதி
1	செல்வி பி.பி.ஆன்	உசாவலர் / விரிவுரையாளர்	01.04.2013
2	செல்வி ஜி.எம்.எச்.பி.கே.ரத்வத்த	உசாவலர் / விரிவுரையாளர்	22.04.2013
3	செல்வி கே.கலீசன்	உசாவலர் / விரிவுரையாளர்	22.04.2013
4	செல்வி எஸ்.டபிள்யு.தேனுவர	உசாவலர் / விரிவுரையாளர்	22.04.2013
5	திரு எல்.கே.இமான் அஸ்லி	உசாவலர் / விரிவுரையாளர்	01.07.2013
6	செல்வி எம்.கயந்தி டில்ஹார	உசாவலர் / விரிவுரையாளர்	01.08.2013
7	செல்வி பி.டபிள்யு.ரி.டி.ஜயதிலக்க	உசாவலர் / விரிவுரையாளர்	25.11.2013
8	செல்வி எச்.எ.இ.எ. ஹரிஸ்சந்திர	உசாவலர் / விரிவுரையாளர்	02.12.2013
9	செல்வி இ.எ.ரி.தீபானி	உசாவலர் / விரிவுரையாளர்	17.12.2013
10	செல்வி பி.ஆர்.டபிள்யு.எம்.எஸ்.சி. சுபாஷினி	உசாவலர் / விரிவுரையாளர்	17.12.2013
11	திரு.பி.டபிள்யு.எஸ்.பண்டார	உசாவலர் / விரிவுரையாளர்	17.12.2013
12	திரு.பீ.டி.எஸ். டீ சில்வா	உசாவலர் / விரிவுரையாளர்	17.12.2013
13	செல்வி இ.கிதுல்கொட	உசாவலர் / விரிவுரையாளர்	01.01.2014
14	செல்வி என்.எஸ்.அமரசேகர	முகாமைத்துவ உதவியாளர்	28.01.2013
15	செல்வி ஆர்.கே.ரி.பிரபாஷினி	முகாமைத்துவ உதவியாளர்	06.02.2013
16	செல்வி எ.எஸ்.விஜேவர்தன	முகாமைத்துவ உதவியாளர்	20.03.2013
17	செல்வி ஜி.பி.சி.ஷாமினி	முகாமைத்துவ உதவியாளர்	21.04.2013
18	செல்வி எல்.எஸ்.ஜயவில	முகாமைத்துவ உதவியாளர்	21.08.2013



செயற்பாட்டு வருமானத்திற்கும், இலாபத்திற்கும் ஊழியர்களின் பங்களிப்பு

ரூபா '000

	2009	2010	2011	2012	2013
செயற்படுத்தல் வருமானம்	357,779	551,155	726,561	957,073	1,249,443
நிகர இலாபம்	90,084	111,752	293,954	420,815	500,954
பணியாளர்	138	151	153	177	204
ஊழியர் ஒருவருக்கான செயற்படுத்தல் வருமானம்	2,593	3,650	4,748	5,407	6,125
ஊழியர் ஒருவருக்கான நிகர இலாபம்	652	740	1,915	2,377	2,456

அட்டவணை 03 - செயற்பாட்டு வருமானத்திற்கு ஊழியர்களின் பங்களிப்பு



உருபு 03 - செயற்பாட்டு வருமானத்திற்கு ஊழியர்களின் பங்களிப்பு

போட்டிக்குரிய சந்தைக்கு முகங்கொடுப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையியல்கள்

தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைக்கு பொருத்தமான ஆற்றலளவுகளையும், திறன்களையும் வாழ்க்கைத்தொழில்புரிபவர்களும், பட்டதாரிகளும் மற்றும் டிப்ளோமாக்காரர்களும் கொண்டிருக்குமுகமாக தேசிய வியாபார முகாமை நிறுவனத்திலிருந்து தகைமைகளைப் பெறுவதற்காக மனதில் நவீன தேவைப்பாடுகளுடன் முறைமையானதும், ஒழுங்குபடுத்தப்பட்டதுமான தன்மையொன்றில் நிறுவனத்தில் பயிற்சிநெறிகள் நடத்தப்படுகின்றன. இந்நோக்கங்களைச் சாதிப்பதற்காக 2013இன் போது கைக்கொள்ளப்பட்ட முறைமையியல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

சகல சேவைகளின் ஏற்பாட்டுக்காக சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் அரசாங்க விடுமுறைகளிலும் (காலை 8.30 முதல் மாலை 4.30 வரை) நிறுவனம் திறந்திருக்கும்.

தொலைபேசிகள் மற்றும் இணையதளம் ஊடாக விண்ணப்பத்தாரிகளைப் பதிவுசெய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையதளத்தின் வழிவகைகள் மூலம் உத்தேசமான சேர விரும்பவர்கள் தகவலை நாட முடியும். இணையதளம்: www.nibm.lk

பணம், காசோலைகள் மற்றும் கடன் அட்டைகள் ஆகியவற்றின் மூலம் பயிற்சிநெறிக் கட்டணங்களை அனுப்புவதற்கு வசதிகள் உள்ளன.

நூற்கல்வி ஆண்டின் ஆரம்பத்திற்க முன்னரே பயிற்சிநெறிகள் வடிவமைக்கப்படுகின்றன. இதனால், நேரத்திற்கு பொருத்தமான பயிற்சிநெறிகளை மாணவர்கள் தெரிவு செய்ய முடியும்.

நிறுவனத்தின் வகிபங்கு, அதன் பணித் திட்டங்கள் மற்றும் வழங்கப்படவுள்ள சேவைகள் ஆகியவை தொடர்பான விபரங்கள் கடிதங்களின் விநியோகம் மூலம் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கிட்டச் செய்யப்படும்.

செயலமர்வின் காலம் 7 நாட்களுக்கு குறைவானது என்றால், செயலமர்வு முடிக்கப்படும் அதே தினத்தன்று சான்றுப்பத்திரங்கள் வழங்கப்படும்.

வேறு பயிற்சிநெறிகள் தொடர்பில், பயிற்சிநெறி முடிவடைந்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சான்றுப்பத்திரங்கள் வழங்கப்படும்.

பொருட்காட்சிகள், செயலமர்வுகள், பத்திரிகை அறிக்கைகள் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியன ஊடாக மக்களின் கவனத்திற்கு நிறுவனத்தின் சேவைகள் கொண்டு வரப்படும்.

கொழும்பில் மட்டுமே நடைபெற்ற பயிற்சிநெறிகள் தற்போது கண்டியிலும், குருநாகலிலும் மற்றும் காலியிலும் நடைபெறுகின்றன.

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் தேவைகளைப் பொறுத்து உசாவுகை, உற்பத்தித்திறன் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி ஆகியவற்றின் சேவைகளுக்காக வசதிகள் கிட்டச் செய்யப்படும்.

ஆண்டு தோறும் வருடாந்த டிப்ளோமா வழங்குதல் வைபவமும், பட்டமளிப்பு விழாவும் ப.ஞா.ச.ம.மண்டபத்தில் சம்பிரதாயபூர்வ வழியொன்றில் நடைபெறுகின்றன.

மருத்துவக் காப்புறுதி

சிறந்த சுகாதாரத்தினதும், ஊழியர் சேமநலனினதும் அக்கறையின் பேரில் வருடாந்தம் புதுப்பிக்கத்தக்க மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக தே.வி.மு.நி. ஒழுங்குபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தே.வி.மு.நி. பணியாளரின் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவதற்கான சிட்டைகளுக்கு மேலதிகமாக, சகல சாதாரண மருத்துவச் சிட்டைகளும் மற்றும் வைத்தியசாலைச் சிட்டைகளும் மீள்நிரப்பப்படும். இதற்கு மேலதிகமாக, ஒரு வருடத்திற்கு பத்து பேருக்கு மட்டும் ஒரு மில்லியன் ரூபா வரை கடுமையான சுகவீனக் காப்பீட்டுக்காகவும், ஆயுள் காப்பீட்டுக்காகவும் குழு ஆயுள் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஊழியர்களின் நன்மைக்காக நிறுவனத்தினால் வழங்கப்படும் மிகவும் முக்கியமான சேவையொன்றாகும்.

தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை, தே.வி.மு.நி.இன் பட்டப் பாடசாலை

தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை (தே.வி.மு.பா.)

தே.வி.மு.நி. அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் மீதான அடிப்படையில் தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் ஆளுனர் சபையானது 2007இன் கம்பெனிகள் அதிகாரச்சட்டம் இல.7இன் கீழ் வர்த்தக முயற்சியொன்றாக வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை என்ற பெயரில் வியாபாரப் பாடசாலையொன்றைப் பதிவுசெய்வதென தீர்மானித்தது. இது நிதி, திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட "ஒரு வழிகாட்டி - அரசாங்க வியாபார முயற்சியின் தலைவரும், பணிப்பாளர் சபையும்" மீதான அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. தே.வி.மு.நி.இன் முழுமையாக உரித்தாக்கப்பட்ட துணை நிறுவனமொன்றாக தே.வி.மு.பா. தொழிற்படும்.

தே.வி.மு.நி.இன் பட்டம் வழங்கும் பாடசாலையே தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலையாகும் (தே.வி.மு.பா.). தொழில்நுட்பத்திலும், உலகமயமாக்கலிலும் போக்குகளை அங்கீகரித்து, தேசிய பல்கலைக்கழகங்களினுள் பிரவேசிப்பதற்கு அதிர்ஷ்டம் போதுமானமளவுக்கு இல்லாதவர்களுக்கும், இலங்கையில் புதிய அறிவையிட்டு தாகத்தைக் கொண்டுள்ளவர்களுக்கும் மாற்று உயர் கல்வி முறைமையொன்றாக தே.வி.மு.பாடசாலையை தே.வி.மு.நி. அமைத்துள்ளது.

கலாசாரரீதியிலானதும், பன்னிலையிலானதுமான வேலைப்படையொன்றுடன் புதுமாற்றத்தையும், தொழிற்றுறை உரிமத்துவத்தையும் தே.வி.மு.பா. ஒன்றிணைக்கின்றது. உயர் தரத்திலான பட்டத்திற்கான செயற்றிறன்களை தே.வி.மு.பா. வடிவமைக்கின்றது. அத்துடன் தலைமைத்துவம், ஒழுக்கவியல், உலக எண்ணம், உள்ளமைய முகாமைத்துவம் மற்றும் முன்னணியிலான விளிம்புநிலையிலான தொழில்நுட்பவியல் புதுமாற்றங்கள் ஆகியவற்றை ஒன்றிணைக்கின்றது. இது மிகச் சிறந்த பட்டதாரிகளையும், பட்டப்பின் படிப்பு தொழிற்றுறையினரையும் உற்பத்தி செய்வது மீது பிரதானமாக நோக்கினைக் கொண்டுள்ளது.

அதன் செயற்பணியினால் வரையறுக்கப்பட்டவாறு தே.வி.மு.பாடசாலையானது எதிர்கால சந்ததிகளின் ஆக்கத்திறனானதும், புதுமாற்றத்திலானதுமான பாடசாலையொன்றாகும். அறிவு அடிப்படையிலான உலகளாவிய பொருளாதாரத்தை நோக்கி நாட்டை தே.வி.மு.பா. வழிநடத்துகின்றது. 21ஆவது நூற்றாண்டு முகாமைத்துவ மற்றும் தகவலர் தொழில்நுட்ப கல்வியின் தேவைகளைக் கரிசனைக்கெடுத்த பின்னர், நடைமுறையிலான அறிவு உறுப்புடன் ளலநெசபல உருவாக்குகின்றது. உயர் கல்வியின் தேவைகள் மீது எதிர்வுகூறும் நூற்கல்வி நிறுவனமொன்றாக, கைத்தொழில் எதிர்பார்ப்புகளுக்கு கற்கையைச் சம்பந்தப்படுத்துவதைச் செய்வதற்கான முக்கியமான அவசியத்தை தே.வி.மு.பா. உறுதிப்படுத்துகின்றது.

மூன்று வியாபாரப் பாடசாலைகளை தே.வி.மு.பா. கொண்டுள்ளது.

- வியாபாரப் பாடசாலை
- கணனிமயமாக்கல் பாடசாலை
- எந்திரவியல் பாடசாலை

வியாபாரப் பாடசாலை

கற்கைக்கான புதுமையான அணுகுமுறையொன்றை பங்கெடுப்பாளர்களுக்கு தே.வி.மு.பா.இன் வியாபாரப் பாடசாலை வழங்குகின்றது. வியாபாரச் சனசமூகத்துடன் கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் வலைப்பின்னலமைப்பு ஆகியன உட்பட வியாபாரப் பாடசாலையில் எடுக்கப்படுகின்ற ஒவ்வொரு முன்னெடுப்பினையும் திறமைக்கான பெருவிருப்பம் செலுத்துகின்றது.

வியாபார முகாமைத்துவம், முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், சட்டம், கணக்கியல் மற்றும் மேலும் பல என வேறுபடுகின்ற பாரிய வகையிலான பட்ட விருப்புக்களை வியாபாரப் பாடசாலை வழங்குகின்றது. அயர்லாந்து, டப்ளின் பல்கலைக்கழகக் கல்லூரி, மலேஷியா லிம்கொக்விங் ஆக்கத்திறன் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய ராஜ்யம் பிளிமவுத் பல்கலைக்கழகம் போன்ற பெருமளவு உலகத்தின் கீர்த்திமிக்க பல்கலைக்கழகங்களுடனான அதன் இணைப்புக்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உலக தரத்திலான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பங்கெடுப்பாளர்களுக்கு வாய்ப்பினை வழிவகுக்கின்றது.

வியாபாரப் பாடசாலையில் கற்றல் ஒரு புதுமையான அனுபவமாகும். நேரடியான வியாபாரச் சவால்களுக்கான நூற்கல்வி அறிவைப் பிரயோகிப்பதற்கு அவர்களை அனுமதித்து வகுப்பறையினதும், உண்மையான உலகச் சூழ்நிலையினதும் சரியான கலப்பினை அனுபவிப்பதற்கான வாய்ப்பு பங்கெடுப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

கணனிப்படுத்தல் பாடசாலை

அயர்லாந்து டப்ளின் பல்கலைக்கழகக் கல்லூரி, மலேஷியா லிம்கொக்விங் ஆக்கத்திறன் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராஜ்யம் பிளிமவுத் பல்கலைக்கழகம் போன்ற உலகத்தின் மேல் வரிசையிலான பல்கலைக்கழகங்களுடன் கணனிப்படுத்தல் பாடசாலை நெருக்கமான இணைப்பினைக் கொண்டுள்ளதுடன், இது பங்கெடுப்பாளர்களுக்கு பலதரப்பட்ட பட்ட செய்திட்டங்களை வழங்குவதற்கு கணனிப்படுத்தல் பாடசாலையை இயலச் செய்கின்றது. கணனி விஞ்ஞானத்தில் நவீன விவரக்கூற்றுக்களில் அதன் செம்மையான கலப்பானது பட்டப்படிப்பு, பட்டம் மற்றும் பட்டப்பின்படிப்பு மட்டங்களில் பரவலாக்கப்பட்ட திட்டங்களை வழங்குகின்றது.

எந்திரவியல் பாடசாலை

தே.வி.மு.பா.இன் கீழ் தொழிற்படும் மூன்று பிரதான பாடசாலைகளில் ஒன்றே எந்திரவியல் பாடசாலையாகும். உலகத்தின் கீர்த்திமிக்க பல்கலைக்கழகங்களுடனான கூட்டுமுயற்சியுடன் கணனி எந்திரவியலும், இலத்திரனியலும் பட்ட பயிற்சிநெறிகளை எந்திரவியல் பாடசாலை வழங்குகின்றது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், பணியாளர் பயிற்சி மற்றும் சர்வதேசச் சனசமூகங்களுடன் வலைப்பின்னலமைப்பு ஆகியன ஊடாக உயர் தரத்திலான தொழில்நுட்பங்களுக்கு காலத்திற்கேற்றவாறு பாடசாலை விளங்குகின்றது.

உயர் கல்வியில் தூரநோக்கிலான நோக்கொன்றுடனான பாடசாலையொன்றாக, கைத்தொழில் எதிர்பார்ப்புகளுக்கு சம்பந்தப்பட்ட கற்கையைச் செய்வதற்கான முக்கியமான அவசியமொன்றை தே.வி.மு.பா. உறுதிப்படுத்துகின்றது. உலகளாவிய எண்ணத்துடனும், உலகளாவிய கைத்தொழில்களில் சிறந்த பயிற்சிகளுடனும் தம்மை

வெளிப்படுத்துவதற்கு எமது மாணவர்களை இயலச் செய்யும் உலகத்தில் உள்ள முன்னணிவாய்ந்த பல்கலைக்கழகங்களுடன் மூலோபாயத்திலான கூட்டுமுயற்சிகளை தே.வி.மு.பா. உருவாக்கியுள்ளது.

“ பச்சைப் பல்கலைக்கழக நகரம்”

இலங்கையில் அதன் வகையில் முதலாவது







விசேட நிகழ்ச்சிகள் - 2013

தே.வி.மு.நி. டிப்ளோமா வழங்கல் வைபவம் - 2013



பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் 2013 டிசம்பர் 3 அன்று டிப்ளோமா வழங்கல் வைபவம் நடைபெற்றது.

இரத்த தான திட்டம் - 2013



2013இல் தே.வி.மு.நி.இன் ஊழியர் களினதும், மாணவர்களினதும் பங்கெடுப்புடன் இரத்த தான இயக்கம் அமுல்படுத்தப்பட்டது.

தே.வி.மு.நி. தலைமையலுவலகத்தில் வெசாக் தம்ம போதனை



பொசன் முழு நோன்மதி தினத்தைக் குறிப்பதற்காக கொழும்பில் உள்ள தலைமையலுவலகத்தில் பணியாளர் களினதும், மாணவர்களினதும் பங்கெடுப்புடன் ஒரு தம்ம போதனை ஒழுங்குபடுத்தப்பட்டது.

புத்தாண்டுக் கொண்டாட்டமும், விளையாட்டு விழாவும்



ஒவ்வொரு வருடமும் சிங்களப் புத்தாண்டு சம்பிரதாயங்களுடன் இணைந்து விளையாட்டுப் விழாவொன்று நடத்தப்படுகின்றது. இதில் பணியாட் உறுப்பினர்களும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் பங்கெடுக்கின்றனர். 2013ஆம் ஆண்டில் ஏப்ரல் 27 அன்று சாலிகா மைதானத்தில் விழா நடைபெற்றது.

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு

நீர் மற்றும் நிலம் போன்ற இயற்கை வளங்களை நாம் பயன்படுத்துவதனாலும், சூழலுக்கு கழிவை விடுவிப்பதனாலும் எமது தாபனத்தின் முக்கியமான அம்சமொன்றாக கூட்டாண்மை சமூகப் பொறுப்பை நாம் கரிசனைக்கெடுக்கின்றோம். முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கல்வி, வாழ்க்கைத்தொழில் பயிற்சி மற்றும் உசாவுகை ஆகியவற்றை வழங்குவதே எமது வியாபாரம் என்பதனால் சகல செயற்பாடுகளிலும் எமது மாணவர்களும் பங்கெடுப்பாளர்களும் தம்மை ஒழுங்குபடுத்துவது முக்கியமானது என்பதையிட்டு நாம் உணர்வுப்பூர்வமாக உள்ளோம். ஆகக்குறைந்த மறுதலையான தாக்கங்களை முன்வைக்கும் தூய்மையானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை நாம் பேணுகின்றோம். எமது மனிதவள கொள்கைகள் ஊடாக எமது ஊழியர்களின் சேமநலனையும் தனிப்பட்ட நன்மையையும் நாம் கவனிக்கின்றோம். எனவே, தரத்திலான பணி ஊடாக தரத்திலான வாழ்க்கையைக் கொண்டிருப்பது மீது எமது நடத்தையும் செயற்பாடுகளும் நோக்கினைக் கொண்டுள்ளன.

நிதிசார்ரீதியில் குறைந்த சிறப்புரிமை கொண்டிருந்தும் திறமையைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் சேவையையும், இலவசமான கருத்தரங்குகளையும் மற்றும் புலமைப்பரிசில்களையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயற்பாடுகளாக தோன்றுகின்ற இளம் தலைவர் விருதும் கிராமிய பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்கு நூல்களை நன்கொடை செய்வதும் எமது தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ளன.

2012/2013ஆம் ஆண்டில் பின்வரும் நன்கொடைகளை தே.வி.மு.நி. செய்துள்ளது:

- பொரளை, அதுளதஸ்ஸன பௌத்த நிலையத்தில் தசபரமித மகா பெரஹரவுக்காக ரூ. 20,000/- நன்கொடையாக அளிக்கப்பட்டது.
- தேசிய வியாபார முகாமை நிறுவனத்தில் திரு.பி.எ.சமரசிங்கவின் இருதய சத்திரசிகிச்சைக்காக ரூ. 100,000/- நன்கொடையாக அளிக்கப்பட்டது.
- தேசிய வியாபார முகாமை நிறுவனத்தில் திரு.சுனில் ஹேரத்தின் இருதய சத்திரசிகிச்சைக்காக ரூ. 100,000/- நன்கொடையாக அளிக்கப்பட்டது.

ISO 9001: 2008 சான்றுப்பத்திரம்

சர்வதேச நியமங்களின் பிரகாரம் 2008ஆம் ஆண்டின் போது அதன் கொள்கைகளையும் திட்டங்களையும் அமுலாக்கியதன் விளைவொன்றாக, 2009இல் நிறுவனத்திற்கு ISO 9001: 2008 சான்றுப்பத்திரம் வழங்கப்பட்டது. எனவே, அதன் நோக்கங்களைச் சாதிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அதன் திட்டங்களை அமுல்படுத்துவதில் செயற்றிறனுக்கும், செம்மைத்தன்மைக்கும் நிறுவனத்தின் பணியாளர் அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளார்கள் என்பது கண்கூடானதாகும்.



தே.வி.மு.நி.க்கான உற்பத்தித்திறன் விருது



உயர் தரத்திலான உற்பத்தித்திறனைச் சாதிக்கும் அதன் நோக்கங்களுக்கு பின்தொடராக முறைமையானதும், செயற்றிறனானதுமாதன்மையை அங்கீகரித்து, 2010ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் வைபவத்தில் திறமைச் சான்றுப்பத்திரமொன்று நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

தேசிய வியாபாரத் திறமை விருதுகள் 2013



2013ஆம் ஆண்டில் இலங்கை தேசிய வர்த்தக சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய வியாபார திறமை விருதுகள் வைபவத்தில் அரசாங்கச் சேவைத் துறைக்கான விசேட திறமை விருதுகளுக்காக தேசிய வியாபார முகாமை நிறுவனம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

எதிர்காலத் திசைகள்

வியாபாரத்தின் கடும் போட்டிக்குரியதன்மைக்கு நாம் முகங்கொடுப்பதையும், எமது போட்டியாளர்களினால் முன்வைக்கப்படும் உற்பத்திகளின் வகையையும் மற்றும் எமது வாடிக்கையாளர்களின் வெளிப்படுத்துகின்ற தேவைகளையும் வழங்குகையில் பின்வருவன மீதான அடிப்படையில் பாரிய உந்துகைத் துறைகள் கீழே அடையாளம் காணப்பட்டன.

1. நிலைத்திருக்கத்தக்க பிரவேசத்துடனும், வெளியேற்ற முனைகளுடனும் சகல அதன் மாணவர்ளுக்கு முழுமையான தொழில் பாதையொன்றை தே.வி.மு.நி. வழங்கும் - எளிய சான்றுப்பத்திரத் திட்டமொன்றிலிருந்து உயர் டிப்ளோமா மட்டத் திட்டங்கள் வரை
2. பிராந்திய நிலையங்களில் விஸ்தரிப்பினையும் மற்றும் கொள்ளளவையும் மேம்படுத்தல்
3. முகாமைத்துவம் தொடர்பிலான உசாவுகைச் சேவை அலகுகளையும், முகாமைத்துவ தகவல் முறைகளையும் தாபித்தல்
4. உட்கட்டமைப்பு வசதிகளையும், சாதனங்களையும் மேம்படுத்துவதற்காக தே.வி.மு.நி. தலைமையலுவலகக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்

5. கொழும்பிலும் மற்றும் பிராந்திய நிலையங்களிலும் எமது வாடிக்கையாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் உலகத் தரத்திலான கற்கை, பொழுதுபோக்கு மற்றும் உணவக வசதிகளை வழங்குதல்
6. மனித வளத்திற்கும், நிருவாகத்திற்கும் நடைமுறை கையேட்டினை விருத்திசெய்தல்
7. அதே அரசாங்க தாபனத்திற்கும், போட்டியாளர்களுக்கும் பொருந்தக்கூடியதாக சகல பணியாளருக்கும் சம்பள மீளாய்வு
8. மாணவர்களுக்கு இலகுவானதும், வெளியேற்றத்திலானதும் முனைகளை வழங்கும் உத்தேசமான முழுமையான தொழில் பாதையின் முன்னேற்றத்திற்குப் பொருந்தக்கூடியதாக நடைமுறையிலான சான்றுப்பத்திர மற்றும் டிப்ளோமா திட்டங்களை மதிப்பாய்தலும், புதுப்பித்தலும்
9. எமது உற்பத்திகளினதும், சேவைகளினதும் தரத்தையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்தல்
10. வெளியீடுகளும், சஞ்சிகைகளும்
    - காலாண்டு மற்றும் வருடாந்தரீதியில் உள்ளக சஞ்சிகையை வெளியிடுதல்
    - டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா மாணவர்களின் தரத்திலான கருத்திட்ட அறிக்கைகளை வெளியிடுதல்
11. ஆதரவுச் சேவைகளின் தொழிற்பாட்டிலான வினைதிறனை மேம்படுத்தல்.



பிரிவுசார் கட்டமைப்பு

இலங்கையின் அரசாங்க மற்றும் தனியார் துறையிலிருந்தும் அத்துடன் வேறு நாடுகளிலிருந்தும் பெறப்பட்ட அதன் பெறுமதியான வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள விதத்தில் ஈடுகொடுப்பதற்காகவும், தேசிய மற்றும் சர்வதேச நியமங்களின் திறன்களையும், ஆற்றலளவுகளையும் கொண்ட வேலைப்படையொன்றை விருத்தி செய்வதற்காகவும் இரு பிரிவுகளாக அதன் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளை நிறுவனம் கட்டமைத்துள்ளது. பாரிய பிரிவுகள் வருமாறு:

- உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு
- முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவு

உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு

உற்பத்தித்திறன் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி ஆகியவற்றில் பலதரப்பட்ட திட்டங்களுடன் அதன் சேவைகளை உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு வழங்குகின்றது.

- முகாமைத்துவ அபிவிருத்தித் திட்டங்கள்
- உற்பத்தித்திறன், தர மேம்படுத்தல் திட்டங்கள்
- உசாவுகைச் சேவைகள்
- மொழித் திட்டங்கள்
- கணனி பிரயோகத் திட்டங்கள்
- அளவெடுத்து ஆக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

வியாபாரத் தாபனங்களிலும், மற்றும் தனிப்பட்டவர்களிலும் உற்பத்தித்திறனையும், முகாமைத்துவ செயற்பாடுகளையும் திருத்தியமைப்பதற்கு வசதியளிப்பதே அதன் பிரதான நோக்கமாகும். பயிற்சி, கல்வி மற்றும் உசாவுகை சேவைகள் போன்ற துறைகளில் பலதரப்பட்ட வகையிலான உற்பத்திகளை இப் பிரிவு வழங்குகின்றது. பாடசாலையிலிருந்து வெளியேறியோரிலிருந்து உயர்வான வாழ்க்கைத் தொழில்புரிபவர்கள் வரை வேறுபடுகின்ற சமூகத்தின் குறுக்குவெட்டுமுகமொன்றுக்கு அதன் சேவைகள் கிட்டுகின்றன. அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள அக்கறையைக் கொண்ட தனிப்பட்டவர்களுக்கும் மற்றும் தாபனங்களுக்கும் இந்த கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள் சிபார்சு செய்யப்படுகின்றது.

கடந்து போன தசாப்தங்களில், இலங்கையில் உள்ள அரசாங்க மற்றும் தனியார் துறை தாபனங்களுக்கு உற்பத்தித்திறன் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதில் தே.வி.மு.நி. முன்னணியில் திகழ்கின்றது. அண்மையில், மந்தமான தயாரிப்பு மற்றும் ஆறு சிக்மா முறைமைகள் என அழைக்கப்பட்ட உலகப் பிரசித்தமான உற்பத்தித்திறன், தர மேம்படுத்தல் முறைமைகளை பிரிவு அண்மையில் ஆரம்பித்துள்ளது. மந்தமான மற்றும் ஆறு சிக்மா முறைமைகளைப் பயன்படுத்தி தரத்தையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்துதல் மீது இலங்கையில் உள்ள பாரிய எண்ணிக்கையிலான கைத்தொழில்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளன.

அதன் உசாவுகைப் பணியை நடத்துவதில் உயர் மட்டத்திலான சீவியத் தொழில் தன்மையை பிரிவு பராமரிக்கின்றது. சகல சம்பந்தப்பட்ட உண்மைகளினதும், கருத்துக்களினதும் நோக்கத்திலான பகுப்பாய்வொன்றின் மீது சுதந்திரமான கருத்தொன்றிலிருந்து எமது உசாவலர்களின் ஆலோசனை விளங்கும். உள்ளக மற்றும் வெளியார் வாழ்க்கைத்தொழிலைப்புரிபவர்களைக் கொண்டுள்ள தே.வி.மு.நி. உசாவலர்களின் குழாம் ஏதாவது உசாவுகைக் கருத்திட்டத்தைக் கையாள்வதற்கு

அவசியமான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ திறன்களையும், அத்துடன் செழுமையான அனுபவத்தையும், வெளிப்படுத்தலையும் கொண்டுள்ளது.

பயிற்சித் திட்டங்கள்

2013 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான காலத்தின் போது, உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு 106 திட்டங்களை நடத்தியுள்ளது. இத் திட்டங்கள் 01 உயர் டிப்ளோமா திட்டம், 20 உயர்தர டிப்ளோமா திட்டங்கள், 04 டிப்ளோமா திட்டங்கள், 27 உயர்தர சான்றுப்பத்திரத் திட்டங்கள், 18 சான்றுப்பத்திரத் திட்டங்கள், 08 அடிப்படைத் திட்டங்கள், 11 உள்வீட்டுத் திட்டங்கள் மற்றும் 17 குறுகிய காலத் திட்டங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளன.

2012ஆம், 2013ஆம் ஆண்டுகளின் போது உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்களின் சாராம்சமொன்றை பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

	வகுதி	2012		2013	
		பயிற்சிநெறிகளின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.	பயிற்சிநெறிகளின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.
1	உயர் டிப்ளோமா திட்டங்கள்	2	272	1	178
2	உயர்தர டிப்ளோமா திட்டங்கள்	23	1,181	20	1,396
3	டிப்ளோமா திட்டங்கள்	3	118	4	114
4	உயர்தர சான்றுப்பத்திர திட்டங்கள்	31	1,480	27	1,197
5	சான்றுப்பத்திர திட்டங்கள்	18	679	18	550
6	அடிப்படைத் திட்டங்கள்	7	366	8	336
7	குறுகிய காலத் திட்டங்கள்	12	206	17	359
8	உள் வீட்டுத் திட்டங்கள்	13	276	11	248
	மொத்தம்	**109**	**4,578**	**106**	**4,378**

அட்டவணை 04: உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்கள்



உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்தித் திட்டங்களில் பங்கெடுப்பு

2013ஆம் ஆண்டின் போது, உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவின் திட்டங்களில் மொத்தமாக 4,378 பேர் பங்கெடுத்தார்கள். இத்தொகையில் உயர் டிப்ளோமா திட்டங்களில் 178 பேர், உயர்தர டிப்ளோமா திட்டங்களில் 1,396 பேர், டிப்ளோமா திட்டங்களில் 114 பேர், உயர்தர சான்றுப்பத்திர பயிற்சிநெறிகளில் 1,197 பேர், சான்றுப்பத்திர பயிற்சி நெறிகளில் 550 பேர், அடிப்படைப் பயிற்சிநெறிகளில் 336 பேர், குறுகிய காலத் திட்டங்களில் 607 பேர் பங்கெடுத்தனர்.

1. கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 கூட்டாண்மைத் தகவல்

1.1 சட்டபூர்வ மற்றும் வாழ்விட அமைப்பு
1991இன் 28ஆம் இலக்க தே.வி.மு.நி. (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1976இன் 23ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினால் தேசிய வியாபார முகாமை நிறுவனம் ஒன்றிணைக்கப்பட்டதுடன், அது 120/5 விஜேராம மாவத்தை, கொழும்பு - 7இல் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை
ஆண்டின் போது, நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் வருமாறு:

- ✓ இணைந்த துறைகளில் தரத்திலான வியாபார முகாமைத்துவக் கல்வியையும், போதனைகளையும் வழங்குதல்.
- ✓ தாபனங்களின் முகாமையாளர்களினதும், மேற்பார்வைப் பணியாளர்களினதும் தகுதிகளை விருத்திசெய்தல்.
- ✓ தாபனங்களில் உள்ள ஊழியர்களைப் பயிறுவித்தலும், அறிவூட்டுதலும்.
- ✓ தாபனங்களில் உற்பத்தித்திறனின் மேம்படுத்தலை வசதிப்படுத்தல்.
- ✓ முகாமைத்துவ உசாவுகையினதும், ஆலோசனைச் சேவைகளினதும் ஏற்பாடு.

1.3 நிதிசார் கூற்றுக்களுக்கான பொறுப்பு
இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும், சமர்ப்பணத்திற்கும் ஆளுனர் சபை பொறுப்பாகும். நிதிசார் கூற்றுக்கள் தொடர்பிலான ஆளுனர் சபையின் பொறுப்பு "ஆளுனர் சபையின் பொறுப்பின் கூற்றில்" குறித்துரைக்கப்பட்டுள்ளது.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பின் அடிப்படை
இந் நிதிசார் கூற்றுக்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் (SLFRS/LKAS) மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

இக் கொள்கைகள் எப்பொழுதுமே செயற்பாட்டிலானவை என்றவாறு, முன்வைக்கப்பட்டுள்ள சகல காலங்கள் ஊடாக 2011 ஜனவரி 01இல் உள்ளவாறு நிதிசார் நிலையையிட்டு அதன் ஆரம்ப SLFRS கூற்றின் தயாரிப்பில் கணக்கீட்டுக் கொள்கைகளை நிறுவனம் முரணற்றதாகப் பிரயோகித்துள்ளது.

2.1.2 அளவீட்டின் அடிப்படை
நியாயமான பெறுமதியில் சில சொத்துக்களும், பொறுப்புக்களும் புறநீங்கலாக, சரித்திரபூர்வ ஆகுசெலவு மாற்றத்தின் கீழ் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.3 தொழிற்பாட்டிலானதும், சமர்ப்பணத்திலானதுமான நாணயம்
நிறுவனம் தொழிற்படுகின்ற ஆரம்பநிலையிலான பொருளாதாரச் சூழலின் நாணயத்தை (தொழிற்பாட்டிலான நாணயம்) பயன்படுத்தி, நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அளவிடப்படுகின்றன. நிறுவனத்தின் தொழிற்பாட்டிலானதும், சமர்ப்பணத்திலானதுமான நாணயமான இலங்கை ரூபாவில் நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.1.4 இணக்கத்தின் கூற்று
2012 டிசம்பர் 31இல் உள்ளவாறு நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுடனும், குறிப்புக்களுடனும் ("நிதிசார் கூற்றுக்கள்") சேர்த்து நிதிசார் நிலைமையின் கூற்று, விரிவான வருமானத்தின் கூற்று, ஒப்புரவில் மாற்றங்கள் மற்றும் பணப் பாய்ச்சல் ஆகியன இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (LKAS மற்றும் SLFRS) இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.5 நடைமுறையிலான கரிசனை
நிறுவனத்தின் மதிப்பீடொன்றையும், நடைமுறையிலான கரிசனையாக தொடர்வதற்கான அதன் தகுதியையும் ஆளுனர் சபையின் உறுப்பினர்கள் செய்துள்ளதுடன், அவர்கள்

ஒன்றில் திரவத்தன்மையைச் செய்வதற்கான அல்லது வர்த்தகத்தை இடைநிறுத்துவதற்கான உத்தேசத்தைக் கொண்டிருக்க வில்லை.

2.1.6 ஒப்பீட்டுரீதியிலான தகவல்

நிறுவனத்தினால் கணக்கீட்டுக் கொள்கைகள் உறுதியாகப் பிரயோகிக்கப்படுவதுடன், முந்திய ஆண்டுக்கானவற்றுடன் உறுதியாகவுள்ளன. நடைமுறை ஆண்டின் சமர்ப்பணத்திற்கு/வகைப்படுத்தலுக்கு இணங்குவதற்காக அவசியப்படுமிடத்து முந்திய ஆண்டுத் தொகைகளும், வாசகங்களும் மீள்-ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

2.1.7 பொருள்தன்மை மற்றும் திரள்வுகள்

ஒத்த விடயங்களில் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதிசார் கூற்றுக்களில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒத்ததன்மையற்ற அல்லது தொழிற்பாடற்ற விடயங்கள் அவை அற்பமானவையாக இல்லாவிட்டால் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.1.8 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

அறிக்கையிடும் திகதியில் வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும், எதிர்பாராப் பொறுப்புக்களின் வெளிப்படுத்தலையும் பாதிக்காத தீர்ப்புக்களையும், மதிப்பீடுகளையும் மற்றும் அனுமானங்களையும் செய்வதற்கு முகாமைத்துவத்தை நிறுவனத்தின் நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு வேண்டுகின்றது.

எதிர்காலத்தினை கரிசனையாகக் கொண்ட முக்கியமான அனுமானங்களும், அடுத்த நிதிசார் ஆண்டினுள் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் காவுகின்ற தொகைகளுக்கு பொருள் சீராக்கல்களை விளைவிப்பதில் குறிப்பிடத்தக்க அபாயமொன்றைக் கொண்டுள்ள நிதிசார் நிலைமையின் திகதியில் மதிப்பிட்டு உறுதியற்றதன்மையில் வேறு முக்கியமான மூலங்களும் கரிசனைக்கெடுக்கப்பட்டுள்ளன.

2.2 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

2.2.1 ஆதனம், பொறிகள் மற்றும் சாதனங்கள்

அ) அளவீடு

ஆதனங்களினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் சகல விடயங்களும் ஆரம்பத்தில் ஆகுசெலவில் பதிவுசெய்யப்படுகின்றன. அதைத் தொடர்ந்து ஆதனத்தினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் விடயங்கள் மீள்-மதிப்பிடப்படுமிடத்து, அத்தகைய சொத்துக்களின் முழு வகுப்பும் மீள்-மதிப்பிடப்படுகின்றன.

நாளாந்த சேவைப்படுத்தலின் ஆகுசெலவுகள், கழிக்கப்பட்ட திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் பெறுமதியில் திரண்ட குறைபாடு ஆகியன புறநீங்கலாக, ஆகுசெலவில் ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் குறிப்பிடப்படுகின்றன (நூலகப் புத்தகங்களுக்காக மட்டும்). ஏனைய முழுமையாக மதிப்பிறக்கப்பட்ட சொத்துக்கள் 2013இல் மீள்-குறிப்பிடப்படும்.

சொத்தொன்று மீள்-மதிப்பிடப்படும் போது, செலவினமொன்றாக ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்து தொடர்பிலான முன்னைய மீள்-மதிப்பீட்டு குறைப்பொன்றை மறுதலையாக்கினால் அன்றி மீள்-மதிப்பீட்டு மேன்மிகையொன்றுக்கு காவும் தொகையில் உள்ள ஏதாவது அதிகரிப்பு பற்று வைக்கப்படுகின்றது. இச் சூழ்நிலைகளில், முன்னைய எழுதப்பட்ட பெறுமதியின் அளவுக்கு வருமானமாக அதிகரிப்பு அங்கீகரிக்கப்படுகின்றது. மீள்-மதிப்பீடொன்றின் விளைவொன்றாக சொத்தின் காவும் தொகை குறைவடையும் போது, அச் சொத்து தொடர்பில் முன்னைய ஏற்றமொன்றை அது மறுதலையாக்கினால் அன்றி செலவினமொன்றாக குறைப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் குறைப்பானது ஒரே சொத்து தொடர்பில் மீள்-மதிப்பீட்டு மேன்மிகையில் தக்கவைக்கப்பட்டுள்ள தொகையை மீறாத அளவுக்கு ஏதாவது தொடர்பிலான மீள்-மதிப்பீட்டு மேன்மிகைக்கு அது சுமத்தப்படுவதுடன், சொத்தொன்று தொடர்பில் மீள்-மதிப்பீட்டு மேன்மிகையில் தொடர்ந்துமிருக்கின்ற ஏதாவது மீதிச் சொத்தின் இளைப்பாறுதலின் அல்லது விற்றொழித்தலின் மீதான திரண்டுள்ள இலாபத்திற்கு அல்லது நஷ்டத்திற்கு நேரடியாக கைமாற்றப்படுகின்றது.

ஆ) ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் சாதனங்களினதும் பயனுள்ள ஆயுள்கள்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் சொத்துக்களின் மீதமான பெறுமதிகளையும், பயனுள்ள ஆயுள்களையும் மற்றும் மதிப்பிறக்கத்தின் முறைகளையும் நிறுவனம் மதிப்பாய்கின்றது; வாழ்க்கைத்தொழில் நிபுணர்கள் மீதான அடிப்படையில் முகாமைத்துவத்தினால் செய்யப்படுகின்ற தீர்ப்புரை இந்தப் பெறுமதிகளினதும், வீதங்களினதும் மற்றும் முறைகளினதும் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுகின்றது.

இ) மதிப்பிறக்கம்

ஆதனத்தினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் ஒவ்வொரு பாகத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்களின் மேலாக ஒரு நேர்க்கோட்டு அடிப்படையின் மீது இலாபத்தில் அல்லது நஷ்டத்தில் மதிப்பிறக்கம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனெனில் சொத்தில் உள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் பாவனையின் எதிர்பார்க்கப்பட்ட மாதிரியை இது மிகவும் நெருக்கமாகப் பிரதிபலிக்கின்றது.

இறையிலி காணி மதிப்பிறக்கப்படவில்லை.

பொருளாதாரரீதியில் பயனுள்ள ஆயுள்கள் வருமாறு:

உருப்படியற்ற சொத்துக்கள்		$33_{1/2}\%$
கட்டிடம்	- நிருமாணம்	2%
	- திரிபுபடுத்தல்	10%
	- சீலிங் மின் காற்றாடிகள்	25%,
தீயணைப்புக் கருவிகள்		20%
மரத்தளபாடங்களும், பொருத்திகளும்		20%
அலுவலக உபகரணங்கள்		20%
பைசிக்கிள்		25%
கணனி உபகரணங்கள்		25%
மோட்டார் வாகனங்கள்		25%
மோட்டார் சைக்கிள்		25%
நூலகப் புத்தகங்கள்		20%

பாவனைக்கு அது கிட்டுகின்ற போது சொத்துக்களின் மதிப்பிறக்கம் ஆரம்பமாவதுடன், விற்பனைக்காக கொண்டுள்ளவாறு சொத்து வகைப்படுத்தப்பட்டுள்ள திகதியின் ஆரம்பத்தில் அத்துடன், சொத்து அங்கீகாரத்தை மீளப்பெறுதல் திகதியில் இடைநின்றுவிடுகின்றது.

ஈ) புதுப்பித்தல் ஆகுசெலவுகள்

செயற்றிறனின் மூலத்திலான மதிப்பிடப்பட்ட நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதார நன்மைகளைப் புதுப்பிக்குமுகமாக அல்லது பேணுமுகமாக ஆதனங்களினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் பழுதுபார்த்தல்களின் அல்லது பராமரிப்பின் மீது ஏற்படுகின்ற செலவினம் இடம்பெறுகின்ற போது செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது.

உ) அங்கீகாரத்தை மீளப்பெறுதல்

விற்றொழிக்கப்படும் போது அல்லது அதன் உபயோகத்தில் அல்லது விற்றொழித்தலிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத போது ஆதனங்களின், பொறிகளின் மற்றும் சாதனங்களின் விடயமொன்றின் அங்கீகாரம் மீளப்பெறப்படுகின்றது. சொத்தின் அங்கீகாரம் மீளப்பெறப்படுதல் மீது எழுகின்ற ஏதாவது ஆதாயம் சொத்தின் அங்கீகாரத்தை மீளப்பெறும் ஆண்டில் விரிவான வருமானத்தின் கூற்றில் உள்ளடக்கப்படும் (நிகர விற்றொழித்தல் வரும்படிகளுக்கும், சொத்தின் காவும் தொகைக்கும் இடையில் வித்தியாசமாகக் கணக்கிடப்பட்ட).

2.2.2 நடந்து கொண்டிருக்கும் மொத்த வேலை

சொத்தின் முதலாவது பயன்பாட்டு நேரத்தில் சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்குகளுக்கு நடந்துகொண்டிருக்கும் மொத்த வேலை கைமாற்றப்படுகின்றது.

2.2.3 உருப்படியற்ற சொத்துக்கள்

அ) அங்கீகாரத்தின் அடிப்படை

பௌதீக துணிக்கையின்றி அடையாளங்காணக்கூடிய நாணயம்-சாராத சொத்தொன்றே உருப்படியற்ற சொத்தொன்றாகும். சொத்து புறம்பாக்கப்படக்கூடியதாக அல்லது ஒப்பந்தத்திலான அல்லது வேறு சட்டபூர்வ உரிமைகளிலிருந்து எழுகின்ற போது அடையாளங்காணுதல் எழுகின்றது.

சொத்துக்கு சாட்டப்படக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலப் பொருளாதார நன்மைகள் உளதாம்தன்மைக்கு பாயும் என எதிர்பார்க்கப்படும் என்ற சாத்தியக்கூறு இருந்தால் மற்றும் இருந்தால் மட்டுமே உருப்படியற்ற சொத்தொன்று அங்கீகரிக்கப்படும்; அத்துடன் "உருப்படியற்ற சொத்துக்கள்" மீது LKAS 38இன் பிரகாரம் சொத்தின் ஆகுசெலவு நம்பகமாக அளவிடப்பட முடியும்.

கணனி வன்கணியத்தின் உள்ளமையப் பாகமொன்றாக அமையாத நிறுவனத்தினால் பயன்படுத்துவதற்கு உத்தரவுப்பத்திரத்தைப் பெறுவதற்காக கணனி மென்கணிய ஆகுசெலவை நிறுவனத்தின் உருப்படியற்ற சொத்துக்கள் உள்ளடக்குகின்றன.

(ஆ) அளவீட்டின் அடிப்படை
ஆகுசெலவின் ஆரம்ப அங்கீகாரம் மீது புறம்பாகத் திரட்டப்பட்ட உருப்படியற்ற சொத்துக்கள் அளவிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, ஏதேனும் இருந்தால், ஒன்றுதிரண்ட பெறுமானப் பதிவழிப்புக்கும், ஒன்றுதிரண்ட குறைப்பாட்டு நஷ்டங்களுக்கும் கழிக்கப்பட்டு ஆகுசெலவில் உருப்படியற்ற சொத்துக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளகரீதியாகத் தோற்றுவிக்கப்பட்ட உருப்படியற்ற சொத்துக்கள் மூலதனமிடப்படுவதில்லை என்பதுடன், செலவினம் ஏற்படுகின்ற ஆண்டில் வருமானக் கூற்றில் செலவினம் பிரதிபலிக்கின்றது.

இ) பெறுமானப் பதிவழிப்பு
நிச்சயமான பயனுள்ள ஆயுள்களுடனான உருப்படியற்ற சொத்துக்கள் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி அவற்றின் பயனுள்ள பொருளாதார ஆயுள்களுக்கு மேலாக பெறுமானப் பதிவழிப்பு செய்யப்படுகின்றன.

பெறுமானப் பதிவழிப்பு முறைகள், பயனுள்ள ஆயுள்கள் மற்றும் மீதமான பெறுமதிகள் ஆகியன குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் மதிப்பாயப்படுகின்றன.

2.2.4 நிதி-சாராத சொத்துக்களின் குறைபாடு

சொத்தொன்று குறைபாடடையுமா என்பதற்கு எடுத்துக்காட்டொன்றுள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் நிறுவனம் மதிப்பிடுகின்றது. இத்தகைய எடுத்துக்காட்டு நிலவினால் அல்லது சொத்தொன்றுக்காக வருடாந்த குறைபாட்டு சோதித்தல் அவசியப்படும் போது சொத்தின் அறவிடக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை நிறுவனம் செய்கின்றது. விற்பதற்கான ஆகுசெலவுகளும், உபயோகத்தில் அதன் பெறுமதியும் சொத்தொன்றின் அல்லது கழிக்கப்பட்ட பணத்தைத் தோற்றுவிக்கும் அலகு நியாயப் பெறுமதியையும் விட சொத்தொன்றின் அளவிடக்கூடிய தொகை உயர்வானது என்பதுடன், ஏனைய சொத்துக்களிலிருந்து அல்லது சொத்துக்களின் குழுவிலிருந்து பெரிதுமே சுயேட்சையான பணப் பாய்ச்சலை சொத்துக்கள் தோற்றுவிக்காவிட்டால் அன்றி, தனிப்பட்ட சொத்தொன்றுக்காக நிர்ணயிக்கப்படுகின்றது. அதன் அறவிடக்கூடிய தொகையை சொத்தொன்றின் காவும் தொகை மீறுமிடத்து, சொத்து குறைபாடாகக் கருதப்படுவதுடன், அதன் அறவிடக்கூடிய தொகைக்கு எழுதப்படுகின்றது. பாவனையில் உள்ள பெறுமதியை மதிப்பிடுகையில், பணத்தின் நேரப் பெறுமதியின் நடைமுறையிலான சந்தை மதிப்பீட்டினையும், சொத்துக்கு குறிப்பான அபாயத்தையும் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவொன்றைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப் பாய்ச்சல்கள் கழிக்கப்படும்.

ஒப்புரவுக்கு மீள்ஸ்ரீமதிப்பீடு எடுக்கப்படுவதற்காக ஏற்கனவே மீள்-மதிப்பிடப்பட்ட ஆதனம் புறநீங்கலாக, குறைபாட்டுச் சொத்தின் தொழிற்பாட்டுடன் இணங்குகின்ற அந்த செலவின வகுதிகளில் விரிவான வருமானக் கூற்றில் தொடர்கின்ற தொழிற்பாடுகளின் குறைபாட்டு நஷ்டங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் ஏதாவது முன்னைய மீள்-மதிப்பீட்டின் தொகை வரை ஒப்புரவில் குறைபாடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நல்லெண்ணம் புறநீங்கலான சொத்துக்களுக்கு, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட குறைப்பாட்டு நஷ்டங்கள் தொடர்ந்துமே நிலவவில்லை அல்லது குறைவடைந்திருக்கக்கூடும் என்ற ஏதாவது எடுத்துக்காட்டு உள்ளதா என்பதையிட்டு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில் மதிப்பீடொன்று செய்யப்படுகின்றது. அத்தகைய

எடுத்துக்காட்டு நிலவினால், அறவிடக்கூடிய தொகையில் மதிப்பீடொன்றை நிறுவனம் செய்கின்றது.

குறைபாட்டிலான இழப்பு அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து சொத்துக்கள் அறவிடல் தொகையை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றமொன்று இருந்தால் மட்டுமே ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட குறைபாட்டு இழப்பொன்று மறுதலையாக்கப்படுகின்றது. அதுதான் விடயம் என்றால், சொத்தின் காவும் தொகையானது அதன் அறவிடக்கூடிய தொகைக்கு அதிகரிக்கப்படுகின்றது. முன்னைய வருடங்களில் சொத்துக்காக குறைபாட்டு இழப்பு அங்கீகரிக்கப்பட்டிருக்காவிட்டால், நிகர மதிப்பிறக்கம் கொண்டிருக்கக்கூடியதை நிர்ணயித்துள்ள காவும் தொகையை அந்த அதிகரித்துள்ள தொகை "மீற" முடியாது. விரிவான வருமானத்தின் கூற்றில் அத்தகைய மறுதலையாக்குதல் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.2.5 நிதிசார் கருவிகள்

2.2.5.1 நிதிசார் சொத்துக்கள்

அதன் நிதிசார் சொத்துக்களைப் பின்வரும் வகுதிகளில் நிறுவனம் வகைப்படுத்துகின்றது: இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியிலான நிதிசார் சொத்துக்கள், கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவை, விற்பனைக்கு கிட்டுகின்ற நிதிசார் சொத்துக்கள், முதிர்ச்சிக்காக ஏற்கப்பட்ட நிதிசார் சொத்துக்கள். நிதிசார் சொத்துக்கள் திரட்டப்பட்ட நோக்கம் மீது வகைப்படுத்தல் தங்கியுள்ளது. ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிசார் சொத்துக்களின் வகைப்படுத்தலை முகாமைத்துவம் நிர்ணயிப்பதுடன், ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் இந்த குறித்தொதுக்கலையும் மீள்-மதிப்பிடுகின்றது.

நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், பணம் மற்றும் வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவை ஆகியவற்றை நிறுவனத்தின் நிதிசார் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன.

2.2.5.1.1 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிசார் சொத்துக்களின் வகைப்படுத்தலை நிறுவனம் நிர்ணயிக்கின்றது. ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் சகல நிதிசார் சொத்துக்களும் நேரடியாகச் சாட்டப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகளில அங்கீகரிக்கப்படுகின்றன.

பணம், நிலையான வைப்புக்களின் மூலதனங்கள் மற்றும் வர்த்தக மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை ஆகியனவற்றை நிறுவனத்தின் நிதிசார் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன.

2.2.5.1.2 பின்தொடர்ந்துவரும் அளவீடு

பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தல் மீது நிதிசார் சொத்துக்களின் பின்தொடர்ந்துவரும் அளவீடு தங்கியுள்ளது:

(அ) கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவை

தீவிரமான சந்தையொன்றில் கூறுவிலையிடப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கின்ற கொடுப்பனவுகளுடன் வகைக்கெழு-சாராத நிதிசார் சொத்துக்களே கடன்களும், கிடைக்க வேண்டியவையுமாகும். ஆரம்ப அளவீட்டின் பின், இத்தகைய நிதிசார் சொத்துக்கள் பின்னர் குறைபாடு நீங்கலாக பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறையைப் (EIR) பயன்படுத்தி பெறுமான பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப்படும். கொள்வனவு மீதான ஏதாவது தள்ளுபடியை அல்லது கட்டுநிதியை அத்துடன் EIRஇன் உள்ளமையப் பாகமொன்றான கட்டணங்களை அல்லது ஆகுசெலவுகளை பொறுப்புக்கு எடுப்பதன் மூலம் பெறுமதியழிக்கப்பட்ட ஆகுசெலவு கணக்கிடப்படுகின்றது. விரிவான வருமானத்தின் கூற்றில் நிதி வருமானத்தில் EIR பெறுமானப் பதிவழிப்பு உள்ளடக்கப்படுகின்றது. நிதி ஆகுசெலவுகளில் வருமானத்தின் விரிவான வருமானத்தின் கூற்றில் குறைபாட்டிலிருந்து எழுகின்ற நஷ்டங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

சந்தை வட்டி விகிதத்திற்கு குறைவான கட்டணமொன்றில் வழங்கப்படுகின்ற கடன்கள் இதையொத்த உற்பத்திப்பொருட்களில் சந்தை வட்டிக் கட்டணங்கள் மீதான அடிப்படையில் கணக்கிடப்பட்டு, அவற்றின் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. தொகை பொருட்படுத்தத்தக்கதல்ல என்பதனால், நியாயமான பெறுமதியில் அவற்றின் கடன்களைத் துணை நிறுவனம் மதிப்பிடவில்லை.

வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவைகளை கிடைக்க வேண்டிய கடன்கள் கொண்டுள்ளன.

(ஆ) முதிர்ச்சிக்கு ஏற்கப்பட்ட மூலதனங்கள்
நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடனும், நிலையான முதிர்ச்சிகளுடனும் வகைக்கெழு-சாராத நிதிசார் சொத்துக்கள் முதிர்ச்சிக்கு அவற்றை ஏற்பதற்கான திட்டமான நோக்கினையும், தகுதியையும் நிறுவனம் கொண்டிருக்கும் போது முதிர்ச்சிக்கு ஏற்கப்பட்டிருந்ததாக வகைப்படுத்தப்படுகின்றன.

நிலையான சொத்துக்களிலும், திறைசேரி உண்டியல்களிலும் உள்ள மூலதனங்களை முதிர்ச்சிக்காக ஏற்கப்பட்ட மூலதனங்கள் கொண்டுள்ளன.

2.2.5.1.3 அங்கீகாரத்தை மீளப்பெறுதல்
பின்வருவனவற்றின் போது ஒரு நிதிசார் சொத்து (அல்லது, நிதிசார் சொத்தொன்றின் பாகமொன்றாக அல்லது ஒத்துதன்மையிலான நிதிசார் சொத்தின் குழுவொன்றின் பாகமாக பொருத்தமானவிடத்து) அங்கீகாரத்தை மீளப்பெறுகின்றது:

- சொத்திலிருந்து பணப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாதல்.

- சொத்திலிருந்து பணப் பாய்வுகளைப் பெறுவதற்கு அதன் உரிமைகளை நிறுவனம் கைமாற்றியுள்ளது அல்லது தொடர்ந்து செல்லல் ஒழுங்கொன்றின் கீழ் மூன்றாம் தரப்பொன்றுக்கு பொருள் தாமதமின்றி முழுமையாக கிடைக்கப்பெற்ற பணப் பாய்வுகளைக் கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடொன்று அனுமானித்துள்ளது; அத்துடன் ஒன்றில்

- சொத்தின் சகல ஆபத்துகளையும், வெகுமதிகளையும் நிறுவனம் கணிசமானளவு கைமாற்றியுள்ளது

- அல்லது சொத்தின் சகல ஆபத்துக்களையும், வெகுமதிகளையும் கணிசமானளவு கைமாற்றி அல்லது தக்கவைத்திருக்கவில்லை, ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினைக் கைமாற்றியுள்ளது.

  சொத்தொன்றிலிருந்த பணப் பாய்வுகளைப் பெறுவதற்கு அதன் உரிமைகளை நிறுவனம் கைமாற்றும் போது அல்லது தொடர்ந்து செல்லல் ஒழுங்கொன்றினுள் செய்துகொண்டுள்ளதுடன், சொத்தின் சகல ஆபத்துக்களையும், வெகுமதிகளையும் கணிசமானளவு தக்கவைக்காத அல்லது அதன் கட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்தாத போது அதில் நிறுவனத்தின் தொடருகின்ற சம்பந்தத்தின் அளவுக்கு சொத்து அங்கீகரிக்கப்படுகின்றது.

  அவ்விடயத்தில், ஓர் இணைந்த பொறுப்பினையும் நிறுவனம் அங்கீகரிக்கின்றது. நிறுவனம் தக்கவைத்துள்ள உரிமைகளையும், கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையொன்றின் மீது கைமாற்றப்பட்ட சொத்தும், இணைந்துள்ள பொறுப்பும் அளவிடப்படுகின்றன.

  கைமாற்றப்பட்ட சொத்தின் மேலான உத்தரவாதமொன்றின் அமைப்பினை எடுக்கின்ற தொடர்கின்ற சம்பந்தமானது சொத்தின் மூலத்திலான காவும் தொகையின் குறைந்த தொகையிலும், மீள்-கொடுப்பனவு செய்வதற்கு நிறுவனம் அவசியப்படுத்தப்படும் ஆகக்கூடுதலான கரிசனையிலான தொகையிலும் அளவிடப்படுகின்றன.

2.2.5.1.4 நிதிசார் சொத்துக்களின் குறைபாடு
நிதிசார் சொத்தொன்று அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுவொன்று குறைபாடடைந்துள்ளதா என்பதாக ஏதாவது நோக்கத்திலான சான்றுள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் நிறுவனம் மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின் (ஏற்பட்டுள்ள 'நஷ்ட நிகழ்வு') ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெற்றதன், நிதிசார் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப் பாய்வுகள் மீது நஷ்ட நிகழ்வு தாக்கமொன்றை கொண்டிருந்ததன் அல்லது நிதிசார் சொத்துக்களின் குழு நம்பகமாக மதிப்பிடப்பட முடியும் என்பதன் விளைவொன்றாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவொன்றாக குறைபாட்டின் நோக்கத்திலான சான்று இருந்தால், இருந்தால் மட்டுமே ஒரு நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுவொன்று குறைபாட்டுடன் இருப்பதாகக்

கருதப்படுகின்றது. வட்டி அல்லது முதனிலைக் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க நிதிசார் கஷ்டத்தை, தவறுகையை அல்லது கடமை தவறுதலை கடன்தருனர்கள் அல்லது கடன்தருனர்களின் குழுவொன்று அனுபவிக்கின்றது, வங்குரோத்து நிலையை அல்லது வேறு நிதிசார் மீள்-ஒழுங்கமைப்பினை அவர்கள் ஏற்படுத்திக் கொள்வார்கள் என்ற நிகழ்தகவை குறைபாட்டின் சான்று உள்ளடக்குவதுடன், நிலுவைகளில் மாற்றங்களுடன் அல்லது தவறுகைகளுடன் இணைகின்ற பொருளாதார நிலைமைகள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப் பாய்வுகளில் அளவிடக்கூடிய குறைப்பொன்றுள்ளது என்பதை அவதானிக்கத்தக்க தரவு எடுத்துக்காட்டுகின்றது.

பெறுமானம் பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவில் மேற்கொள்ளப்பட்ட நிதிசார் சொத்துக்கள்

பெறுமானம் பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவில் மேற்கொள்ளப்பட்ட நிதிசார் சொத்துகளுக்காக, தனிப்பட்டரீதியில் குறிப்பிடத்தக்க நிதிசார் சொத்துக்களுக்கு அல்லது தனிப்பட்டரீதியில் குறிப்பிடத்தகாத நிதிசார் சொத்துக்களுக்கு கூட்டுச்சேர நிலவுகின்ற குறைபாட்டின் நோக்கத்திலான சான்று நிலவுகின்றதா என முதலில் நிறுவனம் மதிப்பிடுகின்றது. குறிப்பிடத்தக்கதோ அல்லது குறிப்பிடத்தகாததோ தனிப்பட்டரீதியிலான மதிப்பிடப்பட்ட நிதிசார் சொத்தொன்றுக்கு நோக்கிலான குறைபாட்டுச் சான்று நிலவவில்லை என நிறுவனம் நிர்ணயித்தால், ஒத்ததன்மையிலான கடன் அபாய குணவியல்புகளுடன் நிதிசார் சொத்துக்களின் குழுவொன்றில் சொத்தினை அது உள்ளடக்குவதுடன், குறைபாட்டுக்காக அவற்றைக் கூட்டுச்சேர மதிப்பிடுகின்றது. குறைபாட்டுக்காக தனிப்பட்டரீதியில் மதிப்பிடப்படுகின்றதும், குறைபாட்டு நஷ்டமொன்றைக் கொண்டுள்ளதும் அல்லது அங்கீகரிக்கப்படுவதற்கு தொடர்கின்றதுமான சொத்துக்கள் குறைபாட்டின் கூட்டுச்சேர்ந்த மதிப்பீடொன்றில் உள்ளடக்கப்படவில்லை.

குறைபாட்டிலான நஷ்டமொன்று இடம்பெற்றுள்ளது என்பதற்கான நோக்கிலான சான்று இருந்தால், சொத்துக்களைக் காவும் தொகைக்கும், மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப் பாய்வுகளின் (இதுவரை ஏற்பட்டிருக்காத எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் நஷ்டங்கள் புறநீங்கலாக) தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக நஷ்டத்தின் தொகை அளவிடப்படுகின்றது. நிதிசார் சொத்துக்களின் மூலத்திலான பயனுறுதிவாய்ந்த வட்டி வீதத்தில் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப் பாய்வுகளில் தற்போதைய பெறுமதி தள்ளுபடி செய்யப்படுகின்றது. மாறத்தக்க வட்டி வீதமொன்றைக் கடனொன்று கொண்டிருந்தால், ஏதேனும் குறைபாட்டு நஷ்டத்தை அளவிடுவதற்கான தள்ளுபடி வீதமே நடப்பிலான பயனுறுதிவாய்ந்த வட்டி வீதமாகும்.

தள்ளுபடி கணக்கொன்றின் உபயோகத்தின் ஊடாக, சொத்தின் காவுகின்ற தொகை குறைக்கப்படுவதுடன், நஷ்டத்தின் தொகையானது விரிவான வருமானத்தின் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. குறைவடைகின்ற காவும் தொகை மீது வட்டி வருமானம் தொடர்ந்தும் திரண்டுள்ளதுடன், குறைபாட்டு நஷ்டத்தை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்காலப் பணப் பாய்வுகளை தள்ளுபடி செய்வதற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தைப் பயன்படுத்தி திரள்கின்றது. விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானத்தின் பாகமாக வட்டி வருமானம் பதிவுசெய்யப்படுகின்றது. எதிர்கால அறவிடலின் உண்மை நிலையிலான எதிர்காலம் இல்லாத போதும், சகல பிணையம் அடையப்பட்டுள்ள அல்லது நிறுவனம்க்கு கைமாற்றப்பட்டுள்ள போதும் இணைந்த உதவித்தொகையுடன் சேர்ந்துள்ள கடன்கள் பெறுமானப் பதிவழிப்பு செய்யப்படுகின்றன. அடுத்து வருகின்ற ஆண்டில், குறைபாடு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இடம்பெறுகின்ற நிகழ்வொன்றின் காரணமாக மதிப்பிடப்பட்ட குறைபாட்டு இழப்பின் தொகை அதிகரிக்கின்ற அல்லது குறைவடைகின்ற காரணத்தினால் உதவித்தொகைக் கணக்கினைச் சீராக்குவதன் மூலம் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட குறைபாட்டு இழப்பு அதிகரிக்கின்றது அல்லது குறைவடைகின்றது. எதிர்காலப் பதிவழிப்பொன்று பின்னர் அறவிடப்பட்டால், விரிவான வருமானத்தின் கூற்றில் நிதி ஆகுசெலவுகளுக்கு அறவிடல் பற்று வைக்கப்படுகின்றது.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிலுவையிலான வர்த்தக கிடைக்க வேண்டியவைகள் குறைபாட்டுக்கான வழங்கப்படுகின்றன.

2.2.5.2.1 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் சகல நிதிசார் பொறுப்புக்களும் அங்கீகரிக்கப்படுகின்றன. இது நேரடியாக சாட்டக்கூடிய கொடுக்கல் வாங்கல் ஆகுசெலவுகளை உள்ளடக்குகின்றது. வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை ஆகியவற்றை நிறுவனத்தின் நிதிசார் பொறுப்புக்கள் உள்ளடக்குகின்றன.

2.2.5.2.2 அடுத்து வருகின்ற அளவீடு

பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தல் மீது நிதிசார் பொறுப்புக்களின் அளவீடு தங்கியுள்ளது.

(அ) வேறு நிதிசார் பொறுப்புக்கள்
வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவைகளை நிறுவனத்தின் வேறு நிதிசார் பொறுப்புக்கள் உள்ளடக்குகின்றன.

2.2.5.2.3 அங்கீகாரத்தை மீளப்பெறுதல்
பொறுப்பின் கீழுள்ள கடப்பாடு நிறைவேற்றப்படும் அல்லது இரத்துச்செய்யப்படும் அல்லது காலாவதியாகும் போது ஒரு நிதிசார் பொறுப்பு அங்கீகாரத்தை மீளப்பெறுவதாகின்றது. கணிசமானளவு வேறுபட்ட தவணைகள் மீது ஒரே இரவல் வழங்குபவரிடமிருந்து இன்னொருவரினால் நடைமுறையிலான நிதிசார் பொறுப்பொன்று பதிலீடு செய்யப்படும் போது அல்லது நடைமுறையிலான பொறுப்பொன்றின் தவணைகள் கணிசமானளவு திரிவுபடுத்தப்படும் போது, மூலத்திலான பொறுப்பின் அங்கீகாரத்தை மீளப்பெறுதலின் ஒன்றாக அத்தகையதொரு பரிமாற்றம் அல்லது திரிவுபடுத்தல் கருதப்படுவதுடன், புதியதொரு பொறுப்பின் அங்கீகாரமும், சம்பந்தப்பட்ட காவும் தொகைகளில் வித்தியாசமும் விரிவான வருமானத்தின் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

2.2.5.3 நிதிசார் கருவிகளை ஈடுசெய்தல்
நிதிசார் சொத்துக்களும், நிதிசார் பொறுப்புக்களும் ஈடுசெய்யப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கு தற்போது நிறைவேற்றப்படுவதற்கு சட்ட உரிமை இருந்தால் அத்துடன் இருந்தால் மட்டும் மற்றும் நிகர அடிப்படையொன்றில் இணக்குவதற்கான அல்லது சொத்துக்களை அடைவதற்கான மற்றும் ஒரே நேரத்தில் பொறுப்புக்களை இணக்குவதற்கான நோக்கமொன்று இருந்தால் நிதிசார் நிலையின் கூற்றில் நிகர தொகை அறிக்கையிடப்படும்.

2.2.6 பொருட்பட்டியல்கள்
காகிதாதிகளையும், முத்திரைக் கையிருப்புக்களையும் பொருட்பட்டியல்கள் உள்ளடக்குவதுடன், அவை ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றன.

2.2.7 வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவை
வர்த்தக கிடைக்க வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, தொடர்ந்து குறைபாட்டுக்கான ஏற்பாடு கழிக்கப்பட்டு பயனுறுதிவாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி பெறுமான பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன.

குறைபாட்டுக்கான நிகர ஏற்பாடுகளை அடைவதற்கு வேறு கிடைக்கவேண்டியவை மதிப்பிடப்படும் தொகைகளில் அவை அங்கீகரிக்கப்படுகின்றன. விரிவான வருமானத்தின் கூற்றில் ஏற்பட்ட தொகை அங்கீகரிக்கப்படுகின்றது.

2.2.7.1 கிடைக்காததும், சந்தேகத்திற்குரியதுமான கடன்களுக்கான ஏற்பாடு
ஒரு வருடம் தொடர்பிலான கடன்தருனர்களைத் தவிர, சகல ஏனையவையும் சந்தேகத்திற்குரிய கடன்களாகக் கருதப்படுவதுடன், இத்தொகைக்கான ஏற்பாடு ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது.

2.2.8 பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள்
கையிலுள்ள காசாகவும், கேள்வி வைப்புக்களாகவும் பணமும், பணச்சமப்படுத்தல்களும் வரையறுக்கப்பட்டுள்ளன

பணப்பாய்வுக் கூற்றின் நோக்கத்திற்காக கையிலுள்ள பணத்தையும், கேள்வி வைப்புக்களையும் வங்கியின் நிகர நிலுவையிலான வங்கி மேலதிகப் பற்றுக்களில் உள்ள வைப்புக்களையும் பணமும், பணச் சமப்படுத்தல்களும் கொண்டுள்ளன.

மறைமுகமான முறை மீதான அடிப்படையில் பணப்பாய்வு கூற்றுக்கள் அறிக்கையிடப்படுகின்றன.

2.3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

2.3.1 பொறுப்புக்கள்
நிதிசார் நிலைமை திகதியின் கூற்றிலிருந்து ஒரு வருடத்தினுள் வருமதியாக வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நிதிசார் நிலைமையின் கூற்றில் தற்போதைய பொறுப்புக்களின் கீழ் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நடைமுறை சாரா

பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் நிதிசார் நிலைமையின் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னரான காலத்தில் வருமதியாக வரும் என எதிர்பார்க்கப்படுபவையாகும்.

2.3.2 ஏற்பாடுகள், எதிர்பாராச் சொத்துக்கள் மற்றும் எதிர்பாராப் பொறுப்புக்கள்

கடப்பாட்டினை இணக்குவதற்கு அவசியமான பொருளாதார நன்மைகளைச் சூழவுள்ள வளங்களின் வெளிப்பாய்வொன்று நிகழத்தக்கதாக இருக்கையிலும், கடப்பாட்டின் தொகையில் நம்பகமான தொகையொன்று செய்யப்படுகையிலும் கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக தற்போதைய கடப்பாடுகளை (சட்ட மற்றும் உருப்படியான) நிறுவனம் கொண்டிருக்கும் போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. பணத்தின் நேரப் பெறுமதியின் நடப்பு சந்தை மதிப்பீடுகளையும், பொறுப்புக்கு குறிப்பான ஆபத்துக்களையும் பிரதிபலிக்கும் வரிக்கு முன்னரான வீதமொன்றில் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பணப்பாய்வுகளை தள்ளுபடிசெய்வதன் மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. நிதி ஆகுசெலவாக முடிக்கப்பெறாததாக தள்ளுபடி அங்கீகரிக்கப்படுகின்றது.

வளங்களின் செலவீடு செய்யப்பட்டாலன்றி, நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகளாக சகல எதிர்பாராப் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. எதிர்பாராச் சொத்து நிலவினால், அது பொருளாதார நன்மையின் உட்பாய்வு நிகழத்தக்கது என்கின்ற போது வெளிப்படுத்தப்படுகின்றது.

2.3.3 வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை

சாதாரண அலுவல் வேளையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடுகளே வர்த்தக கொடுப்பனவுக்குரியவையாகும். நடைமுறைசாராப் பொறுப்புக்களாக அவை முன்வைக்கப்படாத போது ஒரு வருடத்தினுள் அல்லது அதற்கு குறைவாக கொடுப்பனவு வருமதியாகவுள்ள நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் வர்த்தகக் கொடுப்பனவுக்குரியவை அங்கீகரிக்கப்படுவதுடன், பின்னர் பயனுறுதிவாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி பெறுமானம் பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன. தள்ளுபடியின் தாக்கம் பொருட்படுத்தத்தக்கதல்ல என்பதனால், மூலத்திலான பொருட்பட்டியலிடப்பட்ட தொகையில் குறிப்பிடப்படாத வட்டியுடனான குறுகிய காலக் கொடுப்பனவுக்குரியவை அளவிடப்படுகின்றன.

2.3.4 இளைப்பாற்று நன்மைக் கடப்பாடு

(அ) வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை

இளைப்பாறுதல் மீது ஊழியர் ஒருவருக்குக் கிட்டுகின்ற ஓய்வூதிய நன்மை தொகையொன்றாக வரையறுக்கப்பட்ட நன்மையிலான திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதுடன், இது வழமையாக வயது, சேவை வருடங்கள் மற்றும் நஷ்டஈடு ஆகியன போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் மீது தங்கியுள்ளது. 1983இன் அதிகாரச்சட்டம் இல.13இன் கீழ் வழங்கப்பட்ட பணிக்கொடையை வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் கொண்டுள்ளது.

LKAS 19 ஊழியர் நன்மைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மூலசூத்திர முறைக்கு இணங்கும் வகையில் இளைப்பாற்று பணிக்கொடைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிலையான வைப்பில் ஏற்பாட்டு நிதியம் மூலதனமிடப்படுகின்றது.

(ஆ) வரையறுக்கப்பட்ட உதவுதொகை திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

சம்பந்தப்பட்ட நியதியாக்கங்களுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் அமைவாக, ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புகளுக்கு ஊழியர்கள் தகுதியானவர்களாவர். ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும், ஊழியர்களின் மொத்த வேதானாதிகளின் முறையே 12%ஐயும், 3%ஐயும் நிறுவனம் பங்களிக்கின்றது.

2.3.5 நடைமுறையிலான மற்றும் பின்போடப்பட்ட வருமான வரி

(அ) நடைமுறையிலான வரிகள்

நடைமுறையிலானதும், முன்னையதுமான காலங்களுக்கான நடைமுறையிலான வருமான வரிச் சொத்துக்களும், பொறுப்புக்களும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவருக்கு கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தொகையில் அளவிடப்படுகின்றது.

நிதிசார் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறு வருமானத்தினதும், செலவினத்தினதும் ஆக்கக்கூறுகள் மீதான அடிப்படையை வருமானத்திற்கான ஏற்பாடு கொண்டுள்ளதுடன், 2006இன் உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் இல.10இன் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்கிடப்படுகின்றது.

(ஆ) பின்போடப்பட்ட வரி

சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் வரி அடிப்படை மற்றும் நிதி அறிக்கைக் குறிக்கோள் ஆகியன தொடர்பாக அவற்றில் எடுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கிடையில் ஐந்தொகைத் திகதிக்கு தற்காலிகமான மாற்றத்தின்படி பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி பின்போடப்பட்ட வரி தொடர்பாக ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பின்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் மற்றும் பொறுப்புக்களும் சகல தற்காலிக மாற்றங்கள் தொடர்பாக அடையாளம் காணப்படும். பின்போடப்பட்ட சொத்துக்கள் சகல குறைக்க வேண்டிய தற்காலிக மாற்றங்களை முன்கொண்டு சென்று பயன்படுத்தப்படாத வரிப் பொறுப்புக்கள் மற்றும் பயன்படுத்தாத வரி நஷ்டங்கள் ஆகியன தொடர்பாக குறைத்துக்கொள்ள இயலுமான தற்காலிக மாற்றங்களின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வரி செலுத்த வேண்டிய இலாபமாக இருக்கக்கூடிய தொகையிலிருந்தும் மற்றும் முன்கொண்டு சென்று பயன்படுத்த முடியாத வரிப் பொறுப்பினதும் மற்றும் பயன்படுத்த முடியாத வரி நட்டங்களினதும் அளவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

முன் கொண்டு செல்லப்பட்ட பின்போடப்பட்ட வரிச் சொத்தின் அளவு ஒவ்வொரு ஐந்தொகைத் திகதிக்கும் மீளாய்வு செய்யப்படுவதுடன், பயன்படுத்த வேண்டிய பின்போடப்பட்ட வரிச் சொத்துக்களிலிருந்து நூற்றுக்கு அல்லது பகுதிக்கு வாய்ப்பொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய போதியளவான வரியினைச் செலுத்த முடியுமான இலாபங்கள் மேலும் உருவாக்க முடியாது என்ற அளவில் குறைத்துக் கொள்ளப்படும். ஒவ்வொரு ஐந்தொகைத் திகதிக்கும் அடையாளம் காணப்படாத பின்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மீண்டும் மதிப்பீடு செய்யப்படுவதுடன், அறவிட வேண்டிய பின்போடப்பட்ட வரிச் சொத்துக்களுக்கு வாய்ப்பளிக்கின்ற எதிர்கால வரி செலுத்த வேண்டிய இலாபமாக மாற்றக்கூடிய அளவுகள் அடையாளம் காணப்படுகின்றன.

சொத்துக்கள் மீள்-அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது பொறுப்புக்கள் கொடுத்துத் தீர்க்கப்படுகின்ற போது வரிச் சதவீதம் மற்றும் ஐந்தொகையில் விதிக்கப்பட்டிருக்கின்ற அல்லது விதிக்கப்படுகின்ற வரிச் சட்டத்தின்படியான பின்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆண்டின் போது பயன்படுத்திக் கொள்வதற்கு எதிர்பார்த்த வரிச் சதவீதங்கள் கணக்கிடப்படும்.

ஒப்புரவில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட விடயங்களுக்கு தொடர்பான வருமான வரியானது ஒப்புரவில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

பின்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பின்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள், தற்பொழுதுள்ள வரிப் பொறுப்புக்கள் மற்றும் அந்த வரி செலுத்தவேண்டிய பொருள் மற்றும் அந்த வரி அதிகாரத்திற்கு உரிய பின்போடப்பட்ட வரி ஆகியன தற்பொழுதுள்ள வரிச் சொத்துக்களிலிருந்து மீள்-நிரப்புவதற்கு சட்டரீதியாகச் செல்லுபடியாகும் உரிமை ஒன்று காணப்படுமாயின் மீளளிப்பு செய்யப்படும்.

2.3.6 நிதியங்கள்

அரசாங்கத்தின் உதவுகொடையொன்றின் மூலப்பிரமாணத்தை வெளிப்படையாக நிறைவேற்றாத உதவுதொகைகள் ஒப்புரவின் கீழான நிதியங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2.3.7 உதவுதொகைகள் மற்றும் மான்யங்கள்

முறைமையான அடிப்படையொன்றின் மீது இழப்பீடு செய்வதற்கு உத்தேசமாகவுள்ள தொடர்பான ஆகுசெலவுடன் அவற்றைப் பொருந்தச் செய்வதற்கு அவசியமான காலத்தில் வருமானக் கூற்றுக்கு உதவுதொகைகளும், மான்யங்களும் வரவு வைக்கப்படுகின்றன.

நியாயமான பெறுமதியில் நாணயம் சாராத உதவுதொகைகள் உட்பட சொத்துக்கள் தொடர்பான உதவு தொகைகள் ஐந்தொகையின் பின்போடப்பட்டு, தொடர்பான சொத்தின் பயனுள்ள ஆயுளுக்கு மேலாக வருமானக் கூற்றுக்கு வரவு வைக்கப்படுகின்றது.

வருமானத்திற்குத் தொடர்பான உதவுதொகைகள் அவை கிடைக்கின்ற காலத்தில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2.4 விரிவான வருமானத்தின் கூற்று

2.4.1.1 வருமானத்தின் அங்கீகாரம்

(அ) பயிற்சி, உசாவுகை மற்றும் உற்பத்தித்திறனிலிருந்து வருமானம்
நிறுவனத்திற்கு பொருளாதார நன்மைகள் பாயும் என்றவாறு நிகழத்தக்க அளவுக்கு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. கிடைத்த அல்லது கிடைக்கக்கூடிய கரிசனையின் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

(ஆ) வட்டி வருமானம்
திரண்ட அடிப்படை ஒன்றின் மீது பயன்படுத்தி வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

(இ) பங்கிலாப வருமானம்
கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை தாபிக்கப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஈ) ஏனையவை
திரண்ட அடிப்படையொன்றின் மீது வேறு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

(உ) ஆதாயங்கள் மற்றும் நஷ்டங்கள்
ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் ஆகியவற்றினதும் மற்றும் மூலதனங்கள் உட்பட வேறு நடைமுறைசாராச் சொத்துக்களினதும் விற்றொழித்தல் மீதான வருமானத் தன்மையொன்றின் நிகர ஆதாயங்களும், நஷ்டங்களும் விற்றொழித்தல் மீதான வரும்படிகளிலிருந்து கழிக்கப்பட்டுள்ள வருமானக் கூற்றில் பொறுப்புக் காட்டப்பட்டுள்ளதுடன், சொத்துக்களின் காவும் தொகையும், அந்தச் சொத்துக்குத் தொடர்பான மீள் பெறுமதி ஒதுக்கில் தொடர்ந்திருக்கும் தொடர்பான ஆதனமும், பொறியும் மற்றும் சாதனங்களும் ஒன்றுதிரண்ட இலாபத்திற்கு/(நஷ்டம்) நேரடியாக கைமாற்றப்படுகின்றது.

2.4.2 செலவினத்தை அங்கீகரித்தல்
ஏற்பட்ட ஆகுசெலவுக்கும், வருமானத்தின் குறிப்பான விடயங்களின் சம்பாத்தியத்திற்கும் இடையிலான நேரடியான கூட்டிணைவொன்றின் அடிப்படையின் மீது வருமானக் கூற்றின் செலவினங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. செயற்றிறனான நிலையொன்றில் நிறுவனத்தை நிருவகிப்பதிலும், ஆதனத்தையும், பொறிகளையும் மற்றும் சாதனங்களையும் பராமரிப்பதிலும் ஏற்படுகின்ற சகல செலவினமும் ஆண்டுக்கான இலாபத்தை அடைவதில் வருமானத்திற்குச் சுமத்தப்பட்டுள்ளது.

2.5 பொது

2.5.1 அறிக்கையிடும் காலத்தின் இறுதியின் பின்னரான நிகழ்வுகள்

2.5.1.1 நிதிசார் நிலைமையின் திகதியின் பின் இடம்பெறுகின்ற நிகழ்வுகள்
நிதிசார் நிலைமைக் கூற்றின் திகதியின் பின் இடம்பெறுகின்ற சகல பொருள்ரீதியிலானநிகழ்வுகள் கரிசனைக்கெடுக்கப்பட்டுள்ளதுடன், அவசியப்படுமிடத்து, நிதிசார் கூற்றுகளுக்கான சம்பந்தப்பட்ட குறிப்புக்களில் சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

2.5.1.2 எதிர்பாரா நிகழ்வுகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத ஒப்பந்தக் கடப்பாடுகள்
கடந்த கால நிகழ்விலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான சொத்துக்களே அல்லது கடப்பாடே எதிர்பாரா நிகழ்வுகள் என்பதுடன், நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட உறுதியற்ற எதிர்கால நிகழ்வுகளின் இடம்பெறல் அல்லது இடம்பெறாமை மீது மடடுமே உறுதிப்படுத்தப்படும்.

2.5.2 தொடர்பான தரப்பிலான கொடுக்கல் வாங்கல்கள்

விலையொன்று சுமத்தப்பட்டுள்ளதா என்பதற்கு அக்கறையின்றி ஏனையவற்றின் நிதிசார் மற்றும் தொழிற்பாட்டுக் கொள்கைகளுக்கு/தீர்மானங்களுக்கு மேலாக குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது நிறைவேற்றுவதற்கான தகுதியை ஒரு தரப்பு கொண்டிருந்தால் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வெளிப்படுத்தல் செய்யப்படுகின்றது.

2.5.3 முக்கியமான கணக்ககீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புரைகள்

எதிர்காலம் தொடர்பில் அனுமானங்களை நிறுவனம் செய்கின்றது. விளைவிலான கணக்கீட்டு மதிப்பீடுகள் வரைவிலக்கணத்தினால், அற்பமாக தொடர்பான உண்மையான விளைவுகளுக்கு சமமாகவுள்ளன. அடுத்த நிதிசார் ஆண்டினுள் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் காவும் தொகைக்கு பொருள் சீராக்கலொன்றை விளைவிக்கும் குறிப்பிடத்தக்க ஆபத்தொன்றைக் கொண்டுள்ள மதிப்பீடுகளும், அனுமானங்களும் கீழே கருத்துப் பரிமாறப்பட்டுள்ளது.

அ) ஆதனத்திற்கும், பொறிக்கும் மற்றும் சாதனங்களுக்கும் பயனுள்ள ஆயுள்களும், மீதமான பெறுமதிகளும் பொருத்தமானவையாகும்.

பயனுள்ள ஆயுளும், மீதமான பெறுமதி மதிப்பீடுகளும் பொருத்தமானவையா என்பதுடன் அதன் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் உள்ளதா என்பதை நிறுவனம் வருடாந்தம் சோதிக்கின்றது.

ஆ) கிடைக்க வேண்டிய வர்த்தகம் மீதான குறைபாட்டு நஷ்டம்

மாதாந்த அடிப்படையொன்றின் மீது குறைபாட்டினை மதிப்பிடுவதற்கு அதன் கடன்தருனர்களை நிறுவனம் மதிப்பாய்கின்றது. விரிவான வருமானத்தின் கூற்றில் குறைபாட்டு நஷ்டமொன்று பதிவுசெய்யப்பட வேண்டுமா என்பதை நிர்ணயிப்பதில், கடன்தருனர்களின் பிரிவிலிருந்து மதிப்பிடப்பட்ட பணப் பாய்வுகளில் அளவிடக்கூடிய குறைப்பொன்றுள்ளதா என்பதை எடுத்துக்காட்டும் ஏதேனும் அவதானிக்கத்தக்க தரவு உள்ளதா என்பதற்கான தீர்ப்புரைகளை நிறுவனம் மேற்கொள்ளும். சொத்துக்களின் சரித்திரபூர்வ நஷ்ட அனுபவம் மீதான அடிப்படையிலான மதிப்பீடுகளை முகாமைத்துவம் பயன்படுத்துகின்றது.

2..5.4. வழங்கப்பட்ட, ஆனால் இது வரை பயனுறுதியற்ற இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் தாக்கம்

நிறுவனத்தின் நிதிசார் கூற்றுக்களினால் வழங்கப்பட்ட, ஆனால் வழங்கல் திகதி வரை பயனுறுதியற்ற நியமங்களும், பொருள் விளக்கங்களும் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானதென்றால், அவை பயனுறுதிவாய்ந்ததாக வரும் போது இந்த நியமங்களை ஏற்றுக்கொள்வதற்கு நிறுவனம் உத்தேசித்துள்ளது.

அ) SLFRS 9 - நிதிசார் கருவிகள்: வகைப்படுத்தல் மற்றும் அளவீடு

LKAS 39இன் பதிலீடு மீது பணியின் முதலாவது கட்டத்தை வழங்கப்பட்டவாறு SLFRS 9 பிரதிபலிப்பதுடன், LKAS 39இன் வரையறுக்கப்பட்டவாறு நிதிசார் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் வகைப்படுத்தலுக்கும், அளவீட்டுக்கும் பிரயோகமாகின்றது. 2012இல் SLFRS 9 வழங்கப்பட்டதுடன், 2015 ஜனவரி 01 அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகின்ற நிதிசார் காலங்களுக்கு பயனுறுதிவாய்ந்ததாக வருகின்றது. இதன் பிரகாரம் 2016 மார்ச் 31இல் முடிவடைகின்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள் SLFRS 9ஐ ஏற்றுக்கொள்ளும். உரிய நேரத்தில் தாக்கத்தை குழு தொகைரீதிப்படுத்தும்.

ஆ) SLFRS 13 - நியாயமான பெறுமதி அளவீடு

சகல நியாயமான பெறுமதி அளவீடுகளுக்கு SLFRSஇன் கீழ் வழிகாட்டலின் தனித்த மூலமொன்றை SLFRS 13 தாபிக்கின்றது. நியாயமான பெறுமதியைப் பயன்படுத்துவதற்கு நிறுவனம் ஒன்று அவசியப்படும் போது SLFRS 13 மாற்றமடைவதில்லை, ஆனால் பதிலாக, நியாயமான பெறுமதி அவசியப்படும் அல்லது அனுமதிக்கப்படும் போது SLFRSஇன் கீழ் எவ்வாறு நியாயமான பெறுமதியை அளவிடுவது என்பது மீதான வழிகாட்டியை வழங்குகின்றது. 2015 ஜனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பாகின்ற வருடாந்தக் காலங்களுக்கு இந்த நியமம் பயனுறுதிவாய்ந்ததாகும். இதன் பிரகாரம் 2016 மார்ச் 31இன் முடிவடைகின்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள் SLFRS 13ஐ ஏற்றுக்கொள்ளும். இந்த நியமத்தின் முழுமையான ஆய்வு பூர்த்தியாகாத நிலையில்

நிதிசார் தாக்கம் இன்னும் அறியப்படவில்லை என்பதுடன், நியாயமான விதத்தில் மதிப்பிடத்தக்கதும் அல்ல.



3. நிதிசார் கருவிகளின் நியாயமான பெறுமதி

3.1 பெறுமதியழிக்கப்பட்ட ஆகுசெலவில் மேற்கொள்ளப்பட்ட நிதிசார் கருவியின் நியாயமான பெறுமதி

நிதிசார் கூற்றுக்களில் நியாயமான பெறுமதி மேற்கொள்ளப்படாத கம்பெனியின் நிதிசார் கருவிகளின் காவும் தொகைகளினதும், நியாயமான பெறுமதிகளினதும் தொகுப்பினாலான ஒப்பீடொன்று கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நிதிசார்-சாராத சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் நியாயமான பெறுமதிகளை இந்த அட்டவணை உள்ளடக்கவில்லை.

	காவும் தொகை ரூபா	நியாயமான பெறுமதி ரூபா
நிதிசார் சொத்துக்கள்		
பணம் மற்று வங்கி மீதிகள்	39,748,944	-
நிதிசார் மூலதனங்கள்	882,283,722	-
வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை		157,986,858
தொடர்பான தரப்புக்களிலிருந்து வருமதியான தொகைகள்	450,000,000	
மொத்த நிதிசார் சொத்துக்கள்		
நிதிசார் பொறுப்புக்கள்		
வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை	581,568,875	-
வங்கி மேலதிகப்பற்று	1,417,524,425	-
மொத்த நிதிசார் பொறுப்புக்கள்		

நியாயமான பெறுமதியில் மேற்கொள்ளப்படாத நிதிசார் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் நியாயமான பெறுமதி

நிதிசார் கூற்றுக்களில் நியாயமான பெறுமதியில் ஏற்கனவே பதிவுசெய்யப்படாத நிதிசார் கருவிகளுக்கான நியாயமான பெறுமதிகளை நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட முறைமையியல்களையும் மற்றும் அனுமானங்களையும் பின்வருவன விவரிக்கின்றன.

காவும் பெறுமதியை அண்ணளவாக்கும் நியாயமான பெறுமதிக்கான சொத்துக்கள்

குறுகிய கால முதிர்ச்சியொன்றைக் கொண்டுள்ள நிதிசார் சொத்துக்களுக்கும் மற்றும் நிதிசார் பொறுப்புக்களுக்கும் அவற்றின் நியாயமான பெறுமதியைக் காவும் தொகைகள் அண்ணளவாக்குகின்றன என அனுமானிக்கப்படுகின்றது. குறிப்பான முதிர்ச்சி காலமற்ற கிராக்கி வைப்புகளுக்கும் மற்றும் அழைப்பு வைப்புகளுக்கும் இந்த அனுமானம் பிரயோகிக்கப்படுகின்றது.

3.2 நிதிசார் ஆபத்து முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்

அறிமுகம்

கம்பெனியின் செயற்பாடுகளில் ஆபத்து இன்றியமையாதது. ஆனால், ஆபத்து மட்டுப்படுத்தல்களுக்கும் மற்றும் வேறு கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு நடைமுறையிலான அடையாளம் காணுதலினதும், அளவீட்டினதும் மற்றும் கண்காணித்தலினதும் நடைமுறையொன்றின் ஊடாக நிருவகிக்கப்படுகின்றது. கம்பெனியின் தொடருகின்ற இலாபத்தன்மைக்கு ஆபத்து முகாமைத்துவத்தின் இந்த நடைமுறை முக்கியமானது என்பதுடன், தனது பொறுப்புக்களுக்குத் தொடர்பான ஆபத்து வெளிப்படுத்தல்களுக்கு கம்பெனியினுள் ஒவ்வொரு தனிப்பட்டவரும் பொறுப்புக்காட்டக்கூடியவராவார்.

ஆபத்து முகாமைத்துவ வரைச்சட்டம்

கம்பெனியின் ஆபத்து முகாமைத்துவ வரைச்சட்டத்தை தாபிப்பதற்கும், கவனக்குறைப்புக்கும் பணிப்பாளர் சபை முழுமையான பொறுப்பினைக் கொண்டுள்ளது. அதன் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருக்கு அதன் அதிகாரத்தை சபை ஒதுக்கியுள்ளதுடன், அவர்கள் கம்பெனியின் ஆபத்து முகாமைத்துவக் கொள்கைகளை விருத்திசெய்வதற்கும், கண்காணிப்பதற்கும் பொறுப்பானவர்களாவர்.

பிரதான நிதிசார் கருவிகள்

நிதிசார் கருவி ஆபத்திலிருந்து எழுகின்ற கம்பெனியினால் பயன்படுத்துகின்ற பிரதான நிதிசார் கருவிகள் வருமாறு:

கருவி	ஆபத்து(கள்)
• கிடைக்கவேண்டிய தொழில்	கடன் ஆபத்து
• பணம் மற்றும் பணச்சமப்படுத்தல்கள்	திரவநிலை ஆபத்து
• வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை	திரவநிலை ஆபத்து



கடன் ஆபத்து - தவறுகை ஆபத்து

அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிரிணைத்தரப்பின் தகுதியில் உறுதியற்றதன்மையின் காரணமாக எழுகின்ற ஆபத்தே கடன் ஆபத்தாகும். கடனொன்றை அல்லது வேறு வகையில் கொடுப்பனவு செய்வதற்கு கடன் எடுத்தவரின் தவறுகையிலிருந்து எழுகின்ற கடன் இழப்பின் அல்லது நிதிசார் வெகுமதியின் இழப்பின் ஆபத்து ஒப்பந்த கடப்பாடொன்றை நிறைவேற்றுகின்றது.

நிதிசார் சொத்துக்களின் வகுப்பினால் கடனின் தரம்

கடன் ஆபத்துக்கு வெளிப்படுத்தப்பட்ட சகல நிதிசார் சொத்துக்களுக்கான சொத்தின் வகுப்பினால் கடனின் தரத்தை கீழேயுள்ள அட்டவணை காட்டுகின்றது. சமர்ப்பிக்கப்பட்ட தொகையானது குறைபாட்டு படிகளின் மொத்தமானதாகும்.

	குறைபாடற்ற முன்னைய வருமதியற்ற ரூபா	குறைபாடற்ற ஆனால் முன்னைய வருமதி ரூபா	தனிப்பட்ட ரீதியில் குறை பாடான ரூபா	மொத்தம் ரூபா
சொத்துக்கள்				
நிதிசார் மூலதனங்கள்			-	
வர்த்தக மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை	94,950,307	63,036,551	157,986,858	
தொடர்பான தரப்புக்களிலிருந்து வருமதி பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள்	39,748,944		39,748,944	

முன்னைய வருமதியான ஆனால் குறைபாடற்ற

